Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300] of 1953. விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது. தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எடு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஞு சித்திரைமீ உஎஉ வெள்ளிக்கிழமை (10 May. 1963) [ஆல-சூ

# தலை சிறந்த பக்தி இலக்கியம் பன்னிருதிருமுறை

—:0:—

## வீடுதோறும் இந்துசாதனம் படிக்கவேண்டும்

பிறர்படும் துன்பத்தைக் கண்டு யார் ஒருவன் மனம் இரங்குகின்றானோ, அவன் இந்து எனப்படுகின்றான். உயிர்களின் அன்பை அடிப்படையாகக் கொண்டதே இந்துசமயம். அன்பு வேறு, சிவம் வேறு அல்ல. அன்பையே சிவமாகக்கண்டது இந்து சமயம். அன்புக்குப் புறமபான சில கொள்கைகள் நமது இந்து சமயத்துக்குள்ளே இடைக்காலத்தில் புகுத்தப்பட்டவைகள் அன்புக்குப் புறம்பாக எவை நம சமயத்தில் இருக்கின்றனவோ அவற்றைத் தள்ளிவைக்க வேண்டியது நமது கடமையாகும்.

அன்பு பெற்றெடுத்த குழந்தை, அருள். அருளைப் பெறுவதற்காகவே நமது சமய சாதனைகள் யாவும் ஏற்பட்டன. அன்பு எந்த இடத்தில் இல்லையோ, அங்கு இறைவனும் இல்லை என்பது கருத்து. அதாவது அன்புக்குப் புறம்பானவர்கள் அங்கு ஆண்டவனைக் காணவில்லை என்பதே. அன்பு எங்கும் எல்லாக்காலத்தும் ஒரே தன்மையதாய்ப் பரந்துகிடக்கின்றது.

கொலைத்தொழிலும் புலாலும் உடையோர் அன்பற்றவர்கள், அருள் நெறி நின்று வாழத் தகுதியற்றவர்கள். அருள் பெறத் தகுதியற்றவர்கள் என்பது நமது முன்னையோர் கண்ட முடிபாகும். "ஒன்றாக நல்லது கொல்லாமை" என்பது வள்ளுவர் வாக்கு. உலகம் புண்ணியம் என்று போற்றுகின்ற அறிவுகளுக்குள் இணையற்றது எதுவென்றால் எக்காரணம் பற்றியும் பிற உயிரைக் கொல்லாதிருப்பது அதற்கடுத்தபடியாகப் போற்றத் தகுந்த சிறந்த குணம் பிறருக்குத் தீமை உண்டாக்கக்கூடிய எதையும் பேசிவிடாமல் வாய்மை காப்பது. கொலை சம்பந்தப்பட்ட எந்த மார்க்கமும் சன்மார்க்கமல்ல.

வள்ளலாரும் "கொல்லாதவர்களே நல்லவர்கள் நல்லவர்கள்" என்று கூறியுள்ளார்கள். தம்மை இந்து என்று சொல்லிக் கொள்பவர்கள் ஒவ்வொருவரும் முதல் சாதனையாகக் கொலையையும் புலாலையும் தவிர்க்க வேண்டும். உள்ளத்தில் ஈரம் வளர்ப்பவர்களும் அப்படியே. அருள் நெறிநிற்க விரும்புபவர்களும் அப்படியே.

சாதனம் என்ற சொல்லுக்குச் சமயாசாரத்தைச் சாதித்தல் என்பது பொருள். ஒருவன் இந்துவாக வாழ விரும்பினால் அதற்குரிய சாதனைகளை எல்லாம் சாதிக்க வேண்டும். அங்ஙனம் சாதனை செய்பவர்களுக்குக் கடந்த 75 ஆண்டுகளாக இந்துசாதனம் வழிகாட்டி வந்துள்ளது.

இந்துமதத்தின் வரலாறு இருக்குவேதத்தில் காணப்பெறும் மந்திரங்கள் எண்ணும் தோத்திரங்கள் இயற்றப்பெற்ற காலத்திலிருந்து தொடங்குகிறது. அதற்கு முன்பே மத அனுட்டானம் அனுபவத்திலும் அனுபூதி நிலையிலும் இருந்து வந்தது. சரித்திரகாலத்திற்கு முற்பட்ட இக்காலம் இன்னதெனத் தெளிவாக அறியப்படவில்லை.

கி. பி 8 ம் நூற்றாண்டுக்கும் 12 ம் நூற்றாண்டுக்கும் இடையில் உள்ள காலத்தில் பௌத்தமும் சைனமும் வீழ்ச்சியடைந்து பழைய வைதிக மதம் புத்துயிர் பெற்றது. ஒன்பதாம் நூற்றாண்டில் சங்கராச்சாரியார் தோன்றி அத்வைதம் என்ற கொள்கையைப்பரப்பவும், நான்கு மடங்களை சமய வளர்ச்சி நிலையங்களாக நிறுவவும் செய்தார்.

தென்னாட்டில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் பத்திமார்க்கத்தைப் போதித்து, பௌத்தம், சைனம் இரண்டையும் பின்னிடச் செய்தனர். பொதுமக்களுடைய சமய வாழ்க்கையைப் பொறுத்த

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

திரு நா. முத்தையா
ஆத்மஜோதி ஆசிரியர்.

---

## நற் சிந்தனை

—:—

ஆதியந்த மில்லாத
ஆன்மாவே நாமென்ற
சேதி யறிந்து
தெரிவிப்ப தெக்காலம்.

---

## யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை 75-ம் ஆண்டு நிறைவு விழா

—:—

சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் விருத்திசெய்யும்பொருட்டு ஸ்தாபிதமான இச் சபையின் 75-வது ஆண்டு நிறைவுவிழா திருவருளை முன்னிட்டுநிகழும்சோபகிருதுஞு சித்திரை மீ 29-ந் உ மூல நட்சத்திரம் கூடிய ஞாயிற்றுக்கிழமை (12-5-63) சபை நாவலர்மண்டபத்தில்நிகழும்.

காலை 8 மணி – வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன்கோயிலில் விசேட பூசை. காலை 10 மணி தொடக்கம் உச்சிக் காலம்வரை சபை ஆச்சிரமச் சிவபூசை மண்டபத்தில் சிவபூசையும் ஆசீர்வாதமும்.

12 மணிக்கு நாவலர்மண்டபத்தில் கடவுளாராதனை. 12-30 மணிக்கு சமாராதனையும் மாகேசுரபூசையும்.

இரவு 7 மணிக்கு பொதுக் கூட்டம்: தலைவர் திரு த முத்துச்சாமிப்பிள்ளை (சபை அக்கிராசனர்) சங்கீத கதாப் பிரசங்கம் "மாணிக்கவாசக சுவாமிகள்" (அளவையூர்சஞ்சீவி திரு. சீ விஞசித்தம்பி அவர்கள்

---

## சிங்ககிரிக்காவலன்

திரு. சோக்கன் எழுதியதும் இலங்கைக்கலைக்கழகம் 1961 ஆண்டில் நடாத்திய நாடகப் போட்டியில் முதற் பரிசைப் பெற்றதுமான சிங்ககிரிக் காவலன் என்னும் நாடக நூலின் அறிமுக விழா இன்று 1-5-63மாலை 4-30 மணியளவில் யாழ் - மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கலையரசு சொர்ணலிங்கம், சு வேலுப்பிள்ளை, சிவத்தம்பி யோகநாதன், A. T. பொன்னுத்துரை, புஷ்பா செல்வநாயகம் நந்தி ஆகியோர் பங்குபற்றிச் செய்வார்கள்.

---

உ

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிருமே.

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனூர் வணங்கி மகிழ்ந்தெழும்போழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினன் சிவபெருமான்.

---

## மாயாவாத தும்சகோளரி நா. கதிரைவேற்பிள்ளை ஞாபகம்

[சைவசித்தாந்த சாகரம், பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை]

### மாயாவாதம் — (7)

சுக்கிர பகவானின் உத்தம சீடனும், மாயாவாதியும், அகப்பிரமங் கொண்டவனும் ஆகிய சூரபன்மனின் முன்னிலையில் ஒருநாள் சுப்பிரமணியப் பெருமானின் தூதுவராகிய வீரவாகுதேவர் தோன்றினர். 'தேவர்களைச் சிறைவீடுசெய்' என்று உபதேசித்தார் அவர். அவன் கேட்கவில்லை. தம்பியும் சுத்தாத்துவித சைவசித்தாந்தியுமாகிய சிங்கமுகாசுரன் சற்றே புத்திசொல்லிப் பார்த்தான்.

வேதக் காட்சிக்கும் உபநிடத்துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன்; புதியரிற் புதியன்;
மூதக் கார்க்கு மூதக்கவன்; முடிவிற்கு முடிவா
யாதிக் காதியா யுயிர்க்குயிராய் நின்றவமலன்.

ஞானந் தானுருவாகிய நாயகனியல்பை
யானு நீயுமா யிசைத்து மென்றா லதெளிதோ;
மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர்; முழுதுந்
தானுங் காண்கிலன் இன்னமுந் தன்பெருந் தகைமை.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

---

## பொது மொழியில் எழுதாமையால் புது மொழிகள் தோன்றின

—:0:—

சிறுகதை, கவிதை, நாடகம் போன்ற எந்த இலக்கியப் பிரிவும் பொதுமக்களுக்கு விளங்கக்கூடிய முறையில், எளிய செந்தமிழில், மொழியறிவு மிக்க ஒரிவர் மட்டுமன்றி அனைவருமே படித்து இன்புறத்தக்க வகையில் அமைய வேண்டும். அப்படி அந்தக் காலத்துப் பாண்டி நாட்டுப் புலவர்கள் எளிமையாக ஆனல், இலக்கண அமைதியுடன் தமிழ்பேசும் எல்லாப் பிரதேசத்தவருக்கும் பொதுவான நடையில் இலக்கியம் செய்யத் தவறியதால்தான், தமிழ் வழங்கும் இன்னொரு நாடாயிருந்த சேரநாட்டு மக்கள் அத்தகைய இலக்கியங்களைக் கற்கமுடியாமற்போய், இடையில் புகுந்த வடமொழியுடன் கலப்புற்ற நடையிற் பேசிப் பழகி, இன்று இன்னொரு மொழி பேசும் இனமாக அதாவது மலையாள மொழி பேசும் இனமாகமாறிவிட்டார்கள். பழைய தமிழர் இன்று மலையாளிகள் என்ற தனியினமாகிவிட்டார்கள். இப்படி கடினமான நடையில் எழுதுவதுமட்டும்தான் தமிழைச் சிதைத்து வேற்றுமொழியாக்கிவிடும் என்பதல்ல. எளிமையென்று சொல்லிக்கொண்டு பிரதேச வழக்கிலேயே எழு

(தொடர்ச்சி 5 பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயப் பணிக்காகத் தோன்றிய சைவ பரிபாலன சபை

——0——

## முன்னோர் நன்முயற்சியைப் பின்பற்றிச் செய்ந்நன்றி மறவாதிருப்போம்

( ஓர் முதிய அங்கத்தவர் எழுதியது )

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை சாலிவாகன சக வருஷம் 1811, சர்வதாரி வருஷம் சித்திரை மாதம் 20-ந்உ (30-4-1888) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருடைய தமயனார் புத்திரர் த. கைலாசபிள்ளை முதலிய பல பிரமுகஸ்தரின் விடாமுயற்சியால் வண்ணார்பண்ணையில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதற்றலைவர் நல்லூர் திரு ந. ச. பொன்னம்பலம்பிள்ளை. காரியதரிசி திரு. த. கைலாசபிள்ளை இந்தியாவிலே சில காலம் இலங்கைத் தூதராயிருந்து இளைப்பாறியிருக்கும் பழைய நீதிபதி ஸ்ரீ சி. குமாரசுவாமியவர்களின் தந்தையார் ஐயனார்கோயிலடி திரு. அ. சின்னப்பா, நல்லூர்க்கந்தசுவாமி கோவிலதிபராயிருந்த கந்தையா மாப்பாண முதலியார், இரேகுத்துரையாயிருந்த தெல்லிப்பழைச் சுப்பிரமணியர், நீராவியடி பிரபல குத்தகைக்காரன் இராமலிங்கம் முதலாகப் பல பெரியார்கள் நிர்வாக சபை அங்கத்தவராகக் கடமையாற்றினர். இவர்களில் ஒருவராவது இப்பொழுது சீவந்தராயிருக்கவில்லை. இம் மூலகர்த்தாக்களில் நெடுங்காலம் சீவித்திருந்தநீராவியடி அ. தில்லையம்பலமும் இவ்வுலக வாழ்வைச் சற்றேறக்குறைய மூன்று வருஷங்களுக்கு முன்பு தமது 99-வது வயதில் இவ்வுலக வாழ்வை ஒருவினர்,

இச்சபையை நிறுவியவர்களின் முக்கிய நோக்கம் சைவசமயத்தைவளர்த்தல், சைவப் பிள்ளைகளைப் புறச்சமய வலையிற் சிக்காமல் கற்பிப்பதற்குச் சைவ ஆங்கிலக் கலாசாலைகளைத் தாபித்துநடத்துதல், சைவ ஆடவர் மங்கையருக்குச் சைவ சித்தாந்த உண்மைமைகளை ஊர்தோறும் சென்று விளக்குவதற்குச் சைவப் பிரசாரகர்களை நியமித்துத்தாபரித்தல், சைவப் பத்திரிகைகள், பாலபாடங்கள், புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் சைவசமயிகளுக்கு நல்லறிவு புகட்டுதல், சைவக் கோயில்கள் மடங்களைச் சீர்த்திருத்தி நடத்துதல், இன்னும் ஆவனசெய்து தமிழ்ச் சமூகத்துக்கும் பிரதானமாகச் சைவ சமயத்துக்கும் தொண்டு செய்தல் முதலியன.


சபையின் இரண்டாவது வருஷத்திலே தண்ணீர்ச்சாலையடி சித. மு. பசுபதிச்செட்டியாரின் பெருமுயற்சியால் மலையாளத்து உயர்தர நீதிமன்றச் சிரேஷ்ட நீதியரசராயிருந்து இளைப்பாறிய த. செல்லப்பாபிள்ளையவர்கள் சபைத்தலைவராகவும், பிரபல நியாய துரந்தரர்சி நாகலிங்கம்உபதலைவராகவும், பிரபலவழக்கறிஞர் வி. காசிப்பிள்ளை காரியதரிசியாகவும், பசுபதிச்செட்டியார் தனாதிகாரியாகவும், இன்னும் பல பெரியோர்கள் நிருவாக சபை அங்கத்தவராகவும் சேர்க்கப்பட்டார்கள்.

அதே வருஷத்தில்(1889) ஆவணி மாதம் 28-ந் திகதி இந்து சாதனம் (Hindu Organ) என்னும் ஆங்கில தமிழ்ப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முதலில் பத்திரிகாசிரியராயிருந்தவர்கள் ஆங்கிலப் பகுதிக்குச் செல்லப்பாபிள்ளையும் தமிழ்ப் பகுதிக்குக் கைலாசபிள்ளையுமாகும், இன்னும் அக்காலத்திருந்த பல சைவசித்தாந்த விற்பன்னர்கள் விஷயதானஞ் செய்தனர். மூத்திறத்தினரும் வேதனம் பெறாது சமூகத்தொண்டாகவே பணி செய்தனர்.

அடுத்த வருஷம் (1890) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி உயர்தர இந்து வித்தியாசாலை (Hindu High School) என்னும் பெயருடன் உதயமாயிற்று. இதற்கு முன்னோடியாயிருந்தது பின்பு இந்துக்கல்லூரியில் நெடுநாள் அதிபராயிருந்த நெவின்ஸ் செல்லத்துரையின் தகப்பனார் நெவின்ஸ்சிதம்பரப்பிள்ளையால் சில காலத்துக்கு முன் தாபிக்கப்பட்டதும் நியாய துரந்தரர் நாகலிங்கத்தின் பராபரிப்பில் இருந்தது மான யாழ்நகர் சுவதேச உயர்தர வித்தியாசாலை Jaffna Native Town High School) இக்கல்லூரி சைவபரிபாலன சபையாரால் சற்றேறக்குறைய 12 வருஷ காலம் நடத்தப்பட்டு 1902-ம் வருஷத்தில் அரசியற் சட்டரீதியாக நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நிருவாக சபையிடம் (Board of Directors of the Jaffna Hindu College) ஒப்படைக்கப் பட்டது. அக்காலத்தில் சைவபரிபாலன சபைக்கு அரசியற் சட்டப்படியான அந்தஸ்து இல்லை. அதன் ஆஸ்திகள் நம்பிக்கைச் சொத்தாகச் சில அங்கத்தவர் பெயரிலேயே எழுதப்பட்டு வந்தன. சபைதாபனமாகி 43 வருஷத்துக்குப் பிறகுதான் (1931-ல்) சட்டப்படியான அந்தஸ்தைப் பெற்றது.

சபை தொடங்கிய காலத்திலேயே முதற்செய்த பணிகளில் ஒன்று சைவப்பிரசாரகர்களை நியமித்துக் கிராமந்தோறும் அவர்களைக்கொண்டு பிரசங்க மூலம் சைவ அறிவு வளர்த்ததேயாம். இவ்வாறு முதலில் நியமிக்கப்பட்டவரில் ஒருவர் மாதகல் ஏரம்பு ஐயர் அவர்களாவர். இவர் நாவலர் காலத்திலேயே பாண்டித்தியம் அடைந்திருந்தவர். தமது இலகுவாய் விளங்கக்கூடிய தமிழ்ப் பிரசங்கங்களாலும் புராண படன விருத்தி உரைகளாலும் கிராமவாசிகளின் மனத்தைப் பெரிதுங் கவர்ந்தவர். உருவத்தில் நாவலரை ஒத்த தோற்றம் உடையவர். நாவலருடைய படிவப் பிரதிகளை முதலிற் பார்த்த பலர் பூணூல் இல்லாமல் எடுக்கப்பட்ட ஐயருடைய படமோ என்று ஐயுற்றனர். சபையாரால் அக்காலத்தில் நியமிக்கப்பட்டுச் செயலாற்றிய இன்னுமொரு சைவப்பிரசாரகர் கோண்டாவில் சங்கரசுப்பையர். இவர் பிற்காலத்தில் துறவுபூண்டு சிவசங்கர சுப்பிரமணிய சச்சிதானந்த ராச யோகிகள் என்னும் பெயரோடு திகழ்ந்தவர் சமய உண்மைகளை கதாப்பிரசங்கரூபமாகக்கற்றூர்க்கும் மற்றூர்க்கும்புகட்டுவதிலே தமக்கு ஒப்பாருமிக்காரும் இல்லாதவர்.

இவர்களைப்போன்றசைவப் பிரசாரகர்களைச் சைவபரிபாலனசபையார் இன்னும் நியமித்துத் தாபரிப்பார்களேயானல் அது இணையற்ற சமயத்தொண்டாகும்.




### சுகம்பெற வழி

—0—

நீரில் விழுந்தவன் கரையை அடைய விருமபுவதுபோலவும், வழிப்போக்கன் களைப்பால் மரநிழலை அடைய விரும்புவது போலவும், மழைக்குப் பயந்தவன் சிறந்த வீட்டையடைய விரும்புவது போலவும், அதிதி இல்லற தர்மத்தானைச் சென்றடைவது போலவும், ஏழை தார்மீகப் பிரபுவைச் சென்றடைவது போலவும், இருட்டில் வருந்துபவன் தீபத்தை விரும்புவது போலவும், குளிரில் வருந்துபவன் சுவாலித்தெரியும் நெருப்பைச் சென்றடைவதுபோலவும், ஓ மனமே! எல்லாப் பயத்தையும் அகற்றும் சிவனது பாத தாமரைகளை நீ சுகம்பெறச் சென்றடைவாயாக.

— சிவானந்த லஹரி

# நாவலர் கட்டுரைப்போட்டி முடிவுகள்

——:0:——

சென்ற ஆண்டின் இறுதிப்பகுதியில் எம்மால் நடாத்தப்பட்ட நாவலர் நினைவுக் கட்டுரைப்போட்டியின் மாணவர் பகுதி மற்றையோர் பகுதி ஆகிய இரு பிரிவுகளுக்கும் ஏராளமான கட்டுரைகள் வந்துசேர்ந்து எம்மை மகிழ்வித்தன. முடிவுகளைப் பொங்கல் சிறப்பிதழில் வெளிவிடுவதாக அறிவித்திருந்தபோதிலும் குறித்த காலத்தில் பரிசீலனை முடிவடையாமையால் சைவபரிபாலன சபையின் 75-ஆவது ஆண்டு நிறைவு விழாவைக்குறித்து வெளிவரும் இந்தச் சிறப்பிதழில் வெளியிடுகிறோம்.

மாணவர் பகுதிக்குரிய கட்டுரைகளைப் பரிசீலனை செய்துதவிய பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வரஐயர் அவர்களுக்கும், பண்டிதர் பொ. ஜெகநாதன் அவர்களுக்கும் மற்றையோர் பிரிவிற்குரிய கட்டுரைகளைப் பத்திராதிபருடன் பரிசீலனை செய்துதவிய சைவப் புலவர் சித்தாந்த பண்டிதர் திரு. இ. செல்லத்துரை அவர்களுக்கும் பத்திரிகையின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கிறோம்,

அதோடு, இந்தக் கட்டுரைப்போட்டியில் பரிசுகளும் பாராட்டுப்பத்திரங்களும் பெறுபவர்களை வாழ்த்துவதுடன், போட்டியில் பங்குபற்றிக் கட்டுரைகள் அனுப்பி வைத்த சைவத்தமிழார்வம் மிக்க அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

போட்டியில் வெற்றிபெற்றோருக்குப் பரிசுகளும், பாராட்டுப்பத்திரங்களும சபை நடாத்தும் விழாவொன்றில் வைத்து வழங்கப்படும,

**மாணவர் பிரிவு:**

பரிசு பெறுவோர்

1-ம் பரிசு: செல்வன் வே. கரிதாஸ், சிவானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு.

2-ம் பரிசு: செல்வன் இ. பாலகங்காதரன், நாவலர் பாடசாலை, வண்ணார்பண்ணை

3-ம் பரிசு: செல்வன், ஆ. குணசிங்கம், மத்தியகல்லூரி யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பத்திரம் பெறுவோர்:

செல்வி. சு. உதயகுமாரி, க. பொ. த. வகுப்பு, மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு.

செல்வன்: வி. நாகேந்திரம், சிதம்பரக்கல்லூரி, வல்லுவெட்டித்துறை

( தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சிவசங்கரபண்டிதர்

## வடமொழிப்புலமைமூலம் தென்மொழிச் செழுமைக்கு உதவியவர்

பண்டிதை. சத்தியதேவி துரைசிங்கம்

ஈழத் தமிழகத்தின் சரித்திரத்திலே பத்தொன்பதாம் நூற்றண்டு பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டிய காலமாகும் நாட்டின் பல பாகங்களிலும் அக்காலத்தில், கல்விமான்கள் வாழ்ந்திருந்தார்கள. பிறநாட்டிலிருந்தும் சொந்த நாட்டிலிருந்தும் வந்து தாக்கிய இன்னல்களையெல்லாம் கடந்து நமது மொழியையும் சமயத்தையும் அவர்கள் வளர்த்தார்கள். அக் கல்விமான்கள் எல்லோருள்ளும் உச்சிமேல் வைத்துப் போறறந் தகுந்தவர்கள் இருவர். ஒருவர் நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள; மற்றவர் நீர்வேலிச் சிவ சங்கரபண்டிதர் அவர்கள். 'உலகில் படிப்பாளிகள் அநேகர் தோன்றலாம். ஆனல் கல்விமான்கள் அருமையாகவே காணப்படுகிருர்கள்' என்று இத்தாலி தேசத்து அறிஞர் மஸ்லினி கூறினர். கல்வி வெறும் புத்தகப் படிப்புடன் நின்று விடுவதில்லை; அதனல் மாத்திரம் பூரணப்படுவதுமில்லை. கல்விமானுக வருவதற்கு, காமம், வெகுளி, மயக்கமெனனும் மூக் குற்றங்களும் நீங்கிய தூய மன நிலையும் திருவருட் செறிவும் மிக இன்றியமையாதன. ஆறுமுக நாவலர் அவர்களும் சிவசங்கர பண்டிதரவர்களும் புறப்பற்றுக்களை நன்கு வென்றவர்கள். சிவபக்தியும், சிவபூசைப் பேறும் பெற்று உளம தூயராகி ஞானநூற் பொருளை நன்கு உணர்ந்து, உணர்ந்தபடி வாழ்வில் அநுஷ்டித்தவர்கள் அதனலேயே அவர்களிருவரும் பூரணகல்விமான்களாகத் திகழ்ந்தார்கள் 'தாயுமானவர் சுவாமிகட்குப் பின் ஆறுமுகநாவலரே' என்று கூறப்படுவதுபோல, 'சிவஞான முனிவருக்குப் பின் சிவசங்கர பண்டிதரே' என்று கூறலாம்,

சிவஞான முனிவர் மகா கல்விமான். வடமொழியையும் தென்மொழியையும் கசடற நன்கு கற்றவர். அன்றியும் அவ்விரு மொழிகளின் ஒருமைப்பாட்டையும் இன்றியமையாமையையும் உணர்ந்தவர். பொய் கண்டார் காணுப் புனிதமெனும் அத்துவித மெய்கண்டவராகிய மெய்கண்டதேவர் செய்கருளிய சிவஞானபோதத்துள் வைத்துச் சுத்த அத்துவித சைவ சித்தாந்த மென்னும் பெருநெறியைச் சிற்றுரை மூலமும் பேருரை மூலமும் தருங்கரீதியில் விளக்கி மிளிரச்செய்தவர். தருக்கம் வியாகரணம் முதலிய கருவி நூல்களை நன்கு கற்று இரு மொழி அறிவினலும் ஒப்புயர்வற்றபணிகள் செய்தவர். இங்ஙனம் ஞானசூரியனுக விளங்கிய சிவஞான முனிவருக்குச் சமமான வராய்ப் பாராட்டத்தக்க, அத்திபாரமான கல்வியறிவை இரு மொழிகளிலும் பெற்றிருந்தவர் சிவ சங்கரபண்டிதரவர்களே.

அவர்களின் பரிபூரணவிற்பத்தியை நாம் சரிவரப் புரிந்துகொள்ளுவதற்கு, தமிழ் மொழிக்கும் சமஸ்கிருதமொழிக்குமுள்ள தொடர்பையும் அவர்காலச் சூழ்நிலையையும் சிந்திக்கவேண்டும்.

சம்ஸ்கிருத மொழியிலே வேதங்கள் ஆகமங்கள் முதலான நூல்கள்உள. தமிழ் மொழியிலே பன்னிரு திருமுறைகள் பதினன்கு மெய்கண்ட சாஸ்திரங்கள் முதலான நூல்கள உள. இந்த இருமொழி நூல்களும் எண்பத்து நான்கு நூறுயிரம் யோனி பேதங்களான ஆன்மாக்கள் யாவற்றையும் ஈடேற்றும் பொருட்டு இறைவனலும் அவன் அருள் பெற்றோராலும் செய்யப்பட்டவை. ஒரு நூலறிவிற்கு ஏனைய நூலறிவுகள் துணையானவை. அந்நூல்களால் ஆன்மாக்கள் அறிவையும அன்பையும் பெறுகின்றன அறிவு சாஸ்திரங்களாலும் அன்பு தோத்திரங்களாலும் கிடைப்பவை. வேதத்திலுள்ள சாஸ்திரப்பகுதி 'பிராமணம்' என்றும், தோத்திரப் பகுதி 'மந்திரம்' என்றும் வகுக்கப்பட்டிருக்கின்றன. சாஸ்திரங்களெனப்படும் பிராமணங்களால் அறிவையும், தோத்திரங்களெனப் படும் மந்திரங்களால் அன்பையும், இருமொழிமூலமும் ஆன்மாக்கள் பெறுகின்றன.

இரண்டு வேறு நிலைகளாகச் சொல்லப்பட்டாலும் அறிவும் அன்புப் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவே. கடவுள் இருக்கிருர் என்று இலக்கணப் பிரமாணங்களால் நிச்சயித்தல் அறிவுநிலை. உள்ளும் புறமும் அவரை ஒரு தன்மையராய்க் கண்டு கசிந்து உருகுதல் அன்புநிலை. மாமிசமுண்ணலாகாதென அறிதல் அறிவுநிலை உண்[illegible]மை யென்றுணர்[illegible]ணுது விடுதல் அன்புநிலை. இவற்றிடையே முரண்பாடு கிடையாது. அறிவு நிலை அன்பு நிலைக்குப்பூர்வமானது; ஆதாரமானது.

அறிவு, அன்பு என்பன எப்படி நெருங்கிய தொடர்புடையனவோ முரண்பாடற்றனவோ அப்படியே, அவற்றை ஆன்மாக்கள் பெறுதற்குக் கருவியான இருமொழி நூல்களும் நெருங்கிய தொடர்புடையன; முரண்பாடற்றன. ஒன்றுக்கொன்று இன்றியமையாதன. இவ்விருமொழிகளின் ஒருமைப் பாட்டுக்குப இறைவனே வழிவகுத்தான்.

"ஆரியன் கண்டாய்
தமிழன் கண்டாய்"

"செந்தமிழோ டாரியமும்
ஆயினனை"

"ஆரியமும் தமிழும்
உடனே சொல்லிக்
காரிகை யார்க்குக்
கருணை செய்தானே',

"இரு மொழிக்கும்
கண்ணுதலார் முதற்குரவர்"

எனவரும் அருள் வாக்குக்கள் இரு மொழிக்குமுள்ள ஒருமைப் பாட்டைப் புலப் படுத்தும்.

இங்ஙனம், வேதங்கள், ஆகமங்கள், மெய்கண்ட சாஸ்திரங்கள், திருமுறைகள் யாவும் பரமார்த்திக விடயங்களைக் கூறுவதில் ஒருமைப் பாடுடையனவா யிருக்கவும் அக்காலப் படிப்பாளிகளாகிய பலர், அவற்றை முரணுவனவாகக் கற்பித்துக் கொண்டு இடர்ப்படுவராயினர். மயக்கம், வஞ்சகம் ஆகிய குணங்களாற் பாதிக்கப் படுவதாலும், முற்றுகக் கற்காமையாலும் இவற்றின் பொருள் ஒருமைப்பாடு அவர்க்குப் புலப்படாததாயிற்று. வேதம் முதலிய சாஸ்திரங்களில் மயக்கந் தோன்றினல், ஆகமங்கள், இதிகாசங்கள், புராணங்களில் வைத்து அவற்றைத் தெளிந்தறிய வேண்டுமென்று வியாசர் முதலியோர் கூறி யிருக்கவும், அங்ஙனம் தெளிந்தறியாது வேதங்களைத் தனித்து நோக்கி அங்கு அதிகாரிகளின் பேதங் காரணமாகச் சொல்லப்பட்ட பலதரப்பட்ட சாதனைகளின் தாரதம்மியமும் நோக்காது, சிறுதெய்வ வணக்கம், பலியிடுதல் முதலிய இழிந்தோர் [illegible] புலர் மயங்கினர்,

அன்றியும் 'தத்துவமணி' 'ஏகப்பிரம்மம்' முதலிய மகா வாக்கியங்களைத் தருக்க வியாகரண அறிவில் வைத்துப் புடமிட்டுப் பார்க்காமல் பிரமம் ஒன்றே உள்பொருள், அதனின் வேருய் உயிர் என்ருெரு பொருள் இல்லை என்ற கொள்கைகளையும் சிலர் வரவேற்றுர்கள். தமிழில் கூறப்பட்ட சாஸ்திர தோத்திரங்கள் அவர்கள் கூறிய கருத்துக்களை அங்கீகரிக்காதபடியால் 'திருமுறைகள் சைவத்துக்குப் பிரமாண நூல்களாகா என்றும் கூறத்தலைப்பட்டார்கள் இதனல்வெறுப்படைந்த ஒரு சாரார் சமயத்தின் மேலும், வேதாகமங்கள் மேலும் சப்ஸ்கிருத மொழியிலும்கூட வெறு படைந்தார்கள். வடமொழியாளர் தமிழைப் புறக்கணித்தார்கள். இங்ஙனம் அரைகுறைக்கல்விமான்களால் ஏற்பட்ட கேடுகள் சொல்லுந்தரத்தனவல்ல. மனித குலத்தின் புண்ணியக் குறைவால் இந்நிலை அடிக்கடி ஏற்படுகின்றதுபோலும்.

ஆகவே பரிபூரண கல்வியான்களின் தேவை அவசியமாயிருந்தது. மேலே கூறிய வாறு சைவத்தின் பொருளொருமை தெரியாது தடுமாறி பரசமயத்தவர்களாற் ருக்குண்டு வருந்திய தமிழினத்துக்கு வழிகாட்டுபவர்கள் போல ஆறுமுக நாவலரவர்கள் பிறக்க அவர் பிறந்த ஏழாண்டுகளால் சங்கரபண்டிதரவர்கள் 1829ம் ஆண்டிற் ருேன்றினர். தமிழும் சைவமும் பெரிய சோதனைக்குட்பட்டிருந்தபடியால் இரண்டிலும் பரிபூரண ஆராய்ச்சியும் வளர்ச்சிக்கான பணிகளும், மறுமலர்ச்சிக்குரிய கருத்து மாற்றங்களும் செய்ய வேண்டியிருந்தன.

சிவபக்திமான்களாகிய இருவரும், இப் பணிகளை மேற்கொள்ளக் கருதித் தமிழையும் சம்ஸ்கிருதத்தையும் துறைபோகக் கற்க விருப்பினர்கள். இருவரும் இரு மொழிகளையும கற்றபோதிலும், நாவலரவர்கள் தமிழ் மொழியிலும் பண்டிதரவர்கள் வடமொழியிலும அதிக கவனம் செலுத்திஞர்கள். இருவரும் கலந்து கருத்துக்களைப் பரிமாறிப் பூரணத்துவமடைய இதுசுலபமாயிற்று.

பண்டிதரவர்கள் பிறந்த கிராமம் சுன்ஞகம். அங்கு வேதாரணியத்திலிருந்து வந்த சுவாமிநாத தேசிகரவர்களிடமும், பலமொழி விற்பன்னராகிய நாகநாத பண்டிதரிடமும் சம்ஸ்கிருதம் படித்தார். எனினும் சமயத் தெளிவுக்குத் தேவையான சாஸ்திர அறிவு ஈழத்தில் கிடைக்காததால் இந்தியாவிலுள்ள திருப்புகலூருக்குச் சென்று, சம்ஸ்கிருதத்திலும் வேதாகம சாஸ்திர அறிவிலும் மேம்பட்டு விளங்கிய சாஸ்திரிகளொருவரிடம், வியாகரணம், தருக்கம், மீமாம்சை நாடகம் முதலியவற்றை நன்கு படித்தார். காலந்தோறும் சம்ஸ்கிருத நூல்களைத் தாமே தேடி மேன்மேலும் படித்து சம்ஸ்கிருத அறிவுக்கு ஒரு உரைகல்லாய், விற்பன்னராய் இருந்தார். புத்தகங்களை இலகுவிற் பெற முடியாத அக்காலத்தில், ஏடுகளைத் தேடி ஊரூராகத் திரிந்து எத்தனையோ கஷ்டங்களையும்பொருட்படுத்தாது அவர் கற்ற செய்கை நெஞ்சை உருக்குவதாகும். திருவண்ணமலை - குன்றக்குடி ஆதீனம், திருவிடைமருதூர்ப் புத்தகசாலை ஆகிய இடங்களுக்குச் சென்று பழைய ஏடுகளையும் புத்தகங்களையும் சேகரித்து நல்ல முறையில் எழுதி வைத்துப் பயன்படுத்திஞர்.

எவ்வித பணிகளின் மத்தியிலும், சிவனடி மறவாப் பெருவலியுடைய சிவசங்கர பண்டிதரவர்கள் சைவாகமங்களிற் கூறப்பட்டபடி நிருவாண தீட்சை பெற்று அகோர சிவாசாரிய பத்தப் பிரகாரம் அகப்பூசையும் புறப்பூசையும் செய்து வந்தார். நிருவாண தீட்சையின் பின் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த சாஸ்திரங்களையும் சிவாகமங்களிலுள்ள ஞான காண்டம் கிரியா காண்டங்களையும் மேன்மேலும் படித்துத் தெளிவு பெற்றுர். அரதத்தாசாரியார், அப்பைய தீட்சிதர் அருளிய கிரந்தங்களிலும் உமாபதி சிவாசாரியார் செய்த பௌட்கர விருத்தியிலும் அஷ்டப் பிரகரணங்களிலும் இவருக்கு மிகுந்த தேர்ச்சி இருந்தது.

இவருடைய அறிவு குன்றின் மேலிட்ட தீபம்போலப் பிரகாசிக்கவே நாட்டின் பல பாகங்களிலுமிருந்து கல்வியார்வம் கொண்ட மாணவர்கள் படிக்க வந்தார்கள். அவர்களுள் கீரிமலைச் சபாபதிக் குருக்கள், சுன்ஞகம் முருகேச பண்டிதர் முதலியோர் பிரதானமானவர்கள். பிரசித்தி பெற்ற சுன்ஞகம் குமாரசாமிப்புலவர், ஆ முத்துத்தம்பிப் பிள்ளை முதலியோர் முருகேசபண்டிதரின் மாணவர்கள். முருகேசபண்டிதரவர்கள் தாம் இயற்றிய குடந்தை வெண்பாவிற் குரு வணக்கமாகச் சிவசங்கரபண்டிதரவர்களைத் துதித்துள்ளார்கள்.

ஆகம வேதம்
அனைத்தையு மளித்த
ஏகனே இவ்வுரு
என்னத் தோன்றிய
சங்கர பண்டிதர்
தான்மலர் தமியேற்கு
எங்குமாய் நிற்கும்
இலைபிற வெனவே'

என்பது அவர் வாக்கு. சங்கானை அருணசல சாஸ்திரிகள், அராலி சுப்பிரமணியக் குருக்கள், அல்வாய் இராமலிங்கக் குருக்கள், நீர்வேலிச் சந்திரசேகரக் குருக்கள், மாதகல் பரமசாமிக் குருக்கள், ஏரம்பையர், கோப்பாய்ச் சபாபதி நாவலர் முதலானேரும் சங்கர பண்டிதரது மாணக்கர்கள் ஆவர். சுருங்கச் சொன்னல் இன்று யாழ்ப்

( தொடர்ச்சி 6-ம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சோபகிருது ஸ்ரீ சித்திரை மீ
உஎவ வெள்ளிக்கிழமை

## எழுபத்தைந்தாண்டுகள் இயங்கிவரும் எங்கள் சபை

சபை என்று சாற்றும்பொழுது தில்லை நன்மன்றத்தைக் குறிப்பதுபோல ஈழத்திலே எங்கள் சபை என்று நாம் எடுத்துக் கூறுந்தோறும் பழமையில் விழுமிய பெருமையும புதுமையில்இலங்கும்பொலிவும் பொருந்திய யாழ்ப்பாணச் சைவபரிபாலனசபையே என்ற எண்ணம் இயல்பாக எழுவதென்றால் எத்துணை எழில் உடையது இச்சபை என்பது நன்கு புலனாகும, முன்னோர் அளித்த தன்னேரில்லாப் பெருஞ் செல்வமாகத் தமிழகத்திலே தலைசிறந்து விளங்குகின்ற சைவபரிபாலன சபையின் தெய்வப்பணிச் சேவையின் எழுபத்தாறும் ஆண்டு சோபகிருது சித்திரைத்திங்கள் மூலநாள் ஞாயிறன்று சீலமாகத் தொடர்ந்து தொடங்குகின்ற வைபவம் சாலச் சிறப்புடையதொன்றென்பதற் கையமின்று.

சைவச் சால்பென்னும் தகைமையுடன் விளங்குகின்ற இச்சபையை நிறுவிய சான்றோரின் இதயத்தில் எழுபத்தைந்தாண்டுகளுக்கு முன் உதயமான எண்ணம நந்தாமணி விளக்காம் நாவலர் அவர்களின் அடிச்சுவட்டில் அன்னாரின் அறிவுரைகளின் பயனாக மலர்ந்தமையாலன்றோ தமிழகத்திலே சைவபரிபாலனம் நன்கமைந்து நிலவுகின்றது

தமிழகத்தில் மாணக்கர்கள் பழைய பண்புக்கமைய சைவச் சூழலிலே கல்விகற்றுச் சமயம் பேணும் செல்வர்களாகத் திகழவேண்டுமென்ற பெருநோக்கங்கொண்டு சபையார் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை நிறுவினர். அப்பெரும் நிலையம் ஆல்போற்றழைதது கிளைக்கழகங்கள் புடைசூழ இந்நாட்டில் அறிவு மணம் செறிந்து திகழச்செய்தமையை யாம நேராகக் காண்கின்றோம்.

மெய்ப்பொருள் விளக்கும் வெளியீடுகளாக **இந்துசாதனம்** ஆங்கிலத்திலும, செந்தமிழிலும் பயனளிக்கத் தமிழகத்துக்குதவிய சபையின் கொடைக்கும் ஈடுண்டா? "ஞானமெய்ந்நெறிதான் யார்க்கும் **நமச்சிவாயச்** சொல்லாமென்றும்" திருவருள்உருவாய்த் திகழும் திருநீறும சிவமணியும் சைவ சாதனங்களென்றும் திருத் தொண்டர் குருபூசை நாட்களிலும் மாநாடுகளிலும் சைவ முழக்கம் செய்து வளரும் சபை, தமிழகத்தின் தனிக் களஞ்சியமாகும். இப்பெற்றியுடைய எங்கள் சபை எப்பொழுதும் மேன்மைகொள்

சைவநீதி உலகமெங்கும் விளங்குக வணணம இறை பணிநிறகத் திருவருளைக் கசிந்துருக வேண்டுகின்றோம்.

ஈழத்து இன்றைய பெரியார்கள்—1.

# சைவநெறி வளர்க்கும் வண்ணைக் கொடைவள்ளல் திரு. சுப்பிரமணியம்-கனகசபை

—:0:—

[ திரு. வை, முத்துக்குமாரசுவாமி பீ, ஏ. அவர்கள் ]

பெரியார்கள்பலவகைப்படுவர். ஈகையாளர்களைப் பெரியார்கள்எனமதித்துப்போற்றி வருகின்றது தமிழ் நல்லுலகம். இலங்கை மன்னர்கள் இருந்த காலத்தில், அவர்களே கோயில்களையும, குளங்களையும் அமைத்தும் பரிபாலித்தும் வந்தனர். இத்தகைய தொண்டுகளைப் பிற்காலத்தில் பிரபுக்கள் செய்துவந்தனர் பொதுவாக மக்கள் பலர் கூடியும் தொண்டுகள் செய்யப்பட்டு வருகின்றன.

"கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. கோயிலகளே சமூக வாழ்க்கைக்கு மத்திய நிலையங்களாகத் திகழ்கின்றன. கோயில்கள் நன்கு தம் தொழிலை ஆற்றுவது அதனைப் பரிபாலிப்பவர் கையிலே தங்கியிருக்கின்றது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை சைவ நன்மக்களுக்குச் சிறந்தசேவைகள் புரிந்து வருகின்றது. அச்சபையைச் சார்ந்தவர்களுட் சிலர் தனிப்பட்ட முறையிலே சைவத் தமிழர்களுக்கு மிகப் போற்றத்தக்க தொண்டுகள் செயதுள்ளனர். சென்ற மூப்பதாண்டுகளாகத் திரு சு. கனகசபை அவர்கள் யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலனசபையின் ஆட்சிக் குழுவினருள் ஒருவராக விளங்கி வருகின்றார். முருக பக்தராகத் திகழ்கின்றார் யாழ்ப்பாண ஐக்கியலாப நிதிச்சங்கச் சிறுப்பர் திரு. சு. கனகசபை அவர்கள்.

அவரைநினைக்கும்பொழுது மக்கள் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கைலாசவாகனத்தை ஒருமைப் படுத்துவர். நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு இதனை 1950-ல் செய்துதவினார். அதற்கு ஒரு கட்டடமும் அமைத்துக் கொடுத்துள்ளார். 1953-ம் ஆண்டில் கிளாஸ்கோ நகரில் ஒருசிறந்த மணியினை வார்ப்பித்து நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு அளித்தார், அந்தமணி நீண்ட தூரம் கேட்கக்கூடியதாக அமைந்துள்ளது இதகு ஒரு மணிக்கோபுரமும் அமைத்துக் கொடுத்திருக்கின்றார். எழுந்தருளி அருளும் வைரங்கள் செறிந்த தங்க வேல் ஒன்றினையும் 1958-ல் செய்தளித்தார். நல்லூர்ச் சிவன்கோவிலுக்கும் சில கட்டடப் பணிகளுக்கு உதவி செய்துள்ளார்.

மாவிட்டபுரக் கந்தசுவாமி கோவிலில் கருங்கல் மண்டப வேலையை 1960-ம் ஆண்டு தொடக்கம் செய்வித்து வருகின்றார். இம் மண்டபத்துக்கு எட்டுத்தூண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தூணும் செய்ய நான்கு மாதங்கள் பிடிக்கின்றன. நாவலர் பெருமான் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குக் கருங்கற் திருப்பணியைச் செய்ய விரும்பினார், அவ் விருப்பத்தை முருகன் அடியார் சிறுப்பர் கனகசபை அவர்கள் மாவிட்டபுரத்தில் செய்து வருகின்றார். உருத்திரபுரத்திலேஉமாதேவியாருக்கென ஒரு கோவிலையும் கட்டியுள்ளார்.

இவர் வண்ணை நகரின் பழைய கோவில்களில் ஒன்றாகிய பன்றிக்கோட்டுப் பிள்ளையார்கோவிலைப் புனருத்தாரணம் செய்தும், 1951-ல் கும்பாபிஷேகம் செய்வித்தும், பூசைகள் நியமகாலத்தில் நடப்பதற்கு ஏற்பாடுகள் செய்தும், அக்கோயிற் பொறுப்பாளராகவும் இருந்து வருகிறார். இதற்கு 1962-ல் ஒரு புதிய மணியும் மணிக்கூட்டுக் கோபுரமும் அமைத்துள்ளார்.

1954 ல் திருநெல்வேலிச் சிவன் கோவில் மூலஸ்தானத்தைத் திருத்தி அமைத்தார்.
1954 ல் கிராயட்டி சிறுவிளான் வைரவர்கோவிலைப் புனருத்தாரணம் செய்தார். அதற்கு இன்றைய அதிபராகவும் விளங்குகின்றார்

1955 ல் திருக்கேதீச்சரத்துக்கு ஒரு சகடை செய்து கொடுத்துள்ளார்.

1959 ல் அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார்கோவிலுக்குக் கோபுரத்தைச் செய்வித்துள்ளார். அதே ஆண்டில் நயினையம்பதியில் தேர் சிம்மாசனமும் வேறு சிலபணிகளுஞ்செய்துள்ளார்.



1961 ல் பெரிய விளான் பிள்ளையார் கோவில் மூலஸ்தானத்தையும் செய்துள்ளார் ஆண்டுதோறும் திருக்கோணேசுவரத்தில் சங்காபிடேகமும், கோடி அர்ச்சனையும், முன்னேச்சுரத்தில் கோடி அர்ச்சனையும் செய்வித்து சைவ நெறி செழித்தோங்க உதவி செய்து வருகிறார்.

1962ல் புங்குடுதீவு ஐயனார் கோவிலுக்கு நடராச விக்கிரகம் ஒன்றினை அளித்துள்ளார் நாரந்தனை மனோன்மணி அம்மன் கோவிலுக்கு மூலத்தான அம்மன், நந்தி முதலிய திருப்பணிகளையும் செய்துள்ளார். மேலும் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தீர்த்தத்தன்று வெளிவரும் சமயப்பொது அறிவுப் போட்டிக்கு வருடாவருடம் தங்கப் பதக்கப் பரிசுகளை அளித்து வருகின்றார்.

பல கலை விழாக்களுக்குப் போஷகராக அமர்ந்து தமிழ்க் கலைகளை வளர்த்து வருகின்றார். 1956ம் ஆண்டில் இளவாலையில் ஒரு மெய்கண்டான் தமிழ்ப்பாடசாலையில் ஒரு மகாமண்டபத்தையும் 1958 ல் சிறுவிளானில் கனகசபை வித்தியாசாலையையும்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

சைவப் பெரியார்
பாராளுமன்ற மேற்சபை அங்கத்தவர்
சு. நடேசன் அவர்களின்

## வாழ்த்துரை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை கடந்த எழுபத்தைந்தாண்டுகளாக மாபெருஞ்சேவை செய்துள்ளது. அநேக சைவக் கல்லூரிகளை நிறுவி சைவக் கல்லூரியையும் சைவக் கலாச்சாரத்தையும் நிலைநிறுத்தியுள்ளது. சைவப்பிரசாரங்களில் ஈடுபட்டதோடு சைவ நன்மக்களின் உரிமைகளையும் காப்பாற்றுவதற்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் இரண்டு பத்திரிகைகளை செவ்வனே நடத்தி வருகின்றது. இராமநாத வள்ளலைப் போன்ற தலைசிறந்த சைவப் பெரியார்கள் தலைமை வகித்து இத்தாபனத்தை ஓர் உந்நத நிலைக்குக் கொண்டு வந்தார்கள். இதன் சேவை மேன்மேலும் வளர்ந்து சைவ மக்களுடைய நலன்களை எல்லாத் துறையிலும் வளர்க்கவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அணிந்துரை அரங்கம்

### எழிலி — காவியம்

ஆக்கியோன்:
ச. வே. பஞ்சாட்சரம்

வெளியிட்டோர்:
பாலன் வெளியீடு — செட்டிகுளம்

விலை ரூபா: ஒன்று.

ஈழத்தில் தோன்றியுள்ள விழிப்புணர்ச்சியின் பலனாய் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் நூல்களில் எழிலியும ஒன்றாகும்.

ஒரு காவியம் தனிநூலாக வெளிவருவது ஈழத்தில் இதுவே முதற்றடவையாகும். இத்தகைய புது முயற்சியில் ஓர் இளங்கவிஞர் துணிந்து இறங்கியுள்ளார். காவியத்தின் முதற்கண் அமைந்துள்ள தமிழ் வாழ்த்து கவிஞரின் மூச்சாக அமைந்துள்ளது. உலகெங்கிலும் வாழ்கின்ற தமிழ்மக்கள் தலைநிமிர்ந்து வாழவேண்டும்என்ற மூச்சு காவியத்திற்குத் திலக மிடுகின்றது.

காவியத்தின் கருவான கதையமைப்பிலும் உருவான செய்யுளமைப்பிலும், வெற்றிகண்டுள்ளார் கவிஞர். பள்ளி வாழ்க்கை நல்கும் காதலையும், இன்ப எண்ணங்களையும், கடமையுணர்ச்சியையும் பின்னிப் பிணைத்துச் செல்கின்றது கதை.

ஆசிரியரின் கவிதைநடையினைப் பார்க்கும் பொழுது அவரின் 'பொலிந்த' கவித்துவம் புலனாகின்றது. உணர்ச்சிகளுக் கேற்றவாறு சந்தங்களை மாற்றியமைத்து காவிய ஓட்டத்தை விறு விறுப்பாக்குகின்றார்.

"மூடிக் கிடந்த விழி
ஆடிக் கிடந்த உளம்
நாடிக் கிடந்த நறுங்கனவு"

என்ற தொடரில் வரும் கவிதைகள் வீறுநடை போடுகின்றன.

பலபுதிய உவமைகளைக் கையாளுவதன் மூலம் எழிலியை அழகு படுத்துகின்றார் கவிஞர்.

'வஞ்சிக்குக்காவல்வழங்கும் பாமபெனும் பின்னல் ...'
"தென்னந்தளிர் விரலினிடை சிரிக்கும் ஒளிநிலவாங்கன்னி முகநோக்கில் விரிகாவும்..." போன்றபல அடிகளில் புதுமணம் கமழ்கின்றது.

நகர்க்காட்சி, மாலைக் காட்சி, உன்னிச்சைக் குளம் உடைக்கும் காட்சி முதலியவை வர்ணனைப் பொலிவுகொண்டு விளங்குகின்றன

இந்நூலின் 11-ம் 15-ம் அத்தியாயங்கள் சற்றுநீண்டிருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும்.

அச்சுப் பிழைகளின்றி, தெளிவாகவும், அழகாகவும், கண்கவர் மூவர்ண முகப்புடனும், எழிலி ஒளிருகின்றது. இளம ஆசிரியரின் இந்த முதல் முயற்சி முழுவெற்றியாகவே அமைந்துள்ளது.

சபா. ஜெயராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

### 1888-இல் இருந்து பதவி வகுத்தோர் பட்டியல்

**தலைவர்கள்:**

வித்வசிரோன்மணி திரு ந. ச. பொன்னம்பலபிள்ளை 1888—1889
திரு. T. செல்லப்பாபிள்ளை 1889—1892.
சேர் பொன். இராமநாதன் 1892—1893.
திரு. பொன். குமாரசுவாமி 1893—1898.
திரு. T. செல்லப்பாபிள்ளை 1898—1902.
சேர் அம்பலவாணர் கனகசபை 1903—1926.
திரு. S கந்தையா 1927—1929.
சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி 1930—1932.
திரு. S. சிவபாதசுந்தரம் 1932—1933.
திரு. A அம்பலவாணர் 1934—1935
அதிகார். A. நாகநாதர் 1935—1937.
திரு. A. தில்லையம்பலம் 1937—1945.
திரு. இ சிவகுருநாதர் 1945—1953.
திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை 1953—

**உப தலைவர்கள்:**

திரு. ந ச. பொன்னம்பலம்பிள்ளை
,, S. நாகலிங்கம்
,, N. மயில்வாகனம்பிள்ளை
,, S. சண்முகம்பிள்ளை
சேர். A. கனகசபை,
ராவ் பகதூர். C. முருகேசம்பிள்ளை
திரு. S. சபாரத்தின முதலியார்
,, A. சபாபதி
,, V காசிப்பிள்ளை
சேர். W துரைச்சாமி
முதலியார் P. இராசகோபால்
திரு, A அம்பலவாணர்
,, R. சிவகுருநாதர்
,, C. அருளம்பலம்
,, A. தில்லையம்பலம்
,, C. சிவசிதம்பரம்
வைத்திய கலாநிதி S. துரையப்பா
திரு. த. முத்துசுவாமிப்பிள்ளை
,, A. V. குலசிங்கம்
,, S. T. M. P. சிதம்பரநாதச் செட்டியார்
முதலியார் செ மெத்துத்தம்பி
திரு. சு சிவசுப்பிரமணியம்

**கௌரவ செயலாளர்கள்:**

திரு. T. கைலாசபிள்ளை 1888—1889
,, V. காசிப்பிள்ளை 1889—1917
,, S. கனகசபை 1917—1920
,, S, இராசரத்தினம் 1920—1923
,, A. அம்பலவாணன் 1923—1924
,, V. K ஞானசுந்தரம் 1924—1930
,, A. செல்லப்பா 1930—1931
,, V. K, ஞானசுந்தரம் 1931—1932
முதலியார் P, இராசகோபால் 1932—1933
திரு, V. நாகலிங்கம் 1933—1935
,, C, A. கந்தப்பசேகரம் 1935—1937
,, S. செல்லப்பா 1937—1938
,, M. S பாலசுப்பிரமணியம் 1938—1941
,, M. மயில்வாகனம் 1941—1949
,, K. சண்முகம் 1950—1951
,, A. அருளம்பலம் 1951—1953
,, ஆ தனபாலசிங்கம் 1953—

**தனாதிகாரிகள்:**

திரு. M. பசுபதிச்செட்டியார் 1888—1906
,, A. சின்னப்பா 1906—1909
,, S. சிவகுருநாதர் 1909—1917
,, P. வைத்தியலிங்கம் 1917
,, S. T. M. P. சிதம்பரநாதச்செட்டியார் 1917—1920
,, S. இராசரத்தினம் 1920
,, P. K. சோமசுந்தரம் 1920—1930
,, S. T. M. P. சிதம்பரநாதச்செட்டியார் 1930—1938
,, S. பசுபதிச்செட்டியார் 1938—1946
,, T. இராசநாயகம் 1946—1950
முகாந்திரம் E. P. இராசையா 1950—......

இவ்வாரம் 12-5-63 — 18-5-63

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

சொந்தப்பிரச்சினை சில தீர்வுறும். உடல் நிலையும் திருந்த வேண்டும். இனத்தவருடன் சச்சரவுகளுக்கு இடமுண்டு. செலவுகள் பெருகும்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்.

ஞாயிறு, திங்கள், செவ்வாய் காலை எச்சரிக்கையோடு கழிய வேண்டும். வார மிகுதிநாட்கள் புதிய ஈடுபாடுகளுக்கு ஏற்றவை. பண இலாபம் நிச்சயம். மன நிம்மதி இருக்காது.

மிதுனராசி மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், ம் பாதம்.

புதிய முயற்சிகளுக்கு முதலிரு நாட்களும் ஏற்றவை பண இலாபமும் நிச்சயம். செவ்வாய்மாலை புதன் வியாழன் எச்சரிக்கையோடு கழிய வேண்டும். தொழிலீடுபாடுகளுக்கு வாரமிகுதிப் பகுதி ஏற்புடைத்து.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

உடல்நிலை தொடர்ந்து ஊறுபடும். விருப்புவதுபோல் கடந்து கொள்வது கடினம். பணயளவில் நல்லவாரம். வியாழன் மாலை வெள்ளி சனி எச்சரிக்கையோடு கழிய வேண்டும்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

எதிரிகளுக்கு இன்னலும் சமூக வெற்றியும் நிச்சயம். ஆனால் மனநிம்மதி இருக்காது. புதிய முயற்சிகள் தேங்கல்படும்; விரும்பத்தகாத கடைடனங்களைச் சந்திக்க வேண்டிவரும்,

கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

மன நிம்மதி இருக்காது. தொழிலளவில் நல்லவாரம், நிலபுலங்களால் இலாபமும், நண்பர்களின் சலுகைகளும் நிச்சயம். உடல் நிலை ஊறுபடும்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

உமது சுதந்திரம் மட்டுப்படுத்தப்படும். தூற்றித் திரிவோர் பற்றி எச்சரிக்கை. தந்தைவழி உறவினர்தொல்லை தருவர். உடல் நிலையும் ஊறுபடும்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

எதிர்ப்பாலைச் சேர்ந்த நண்பர்கள் தொல்லை தருவர். இரகசிய எதிரிகளாலும் சச்சரவுகள் ஏற்படும். ஆனால் பணமளவில் நல்ல வாரம் விவசாய வெற்றியும் நிச்சயம்,

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

எதிரிகளுக்கு இன்னல் நிச்சயம், வழமையிலும் வேலை அதிகமாயிருக்கும். வேலை வழமையிலும் சில மாற்றங்கள் உண்டாம், உடல்நிலை ஊறுபடும்.

மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

குடும்ப விவகாரங்களில் கலகம் தொடரும். உடல்நிலை மேலும் திருப்தியற்றதாயிருக்கும், நண்பர்கள் உம்முடைய நம்பிக்கைக்கு துரோகம் செய்வர்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

பணமளவில் நல்ல வாரம், எதிர்ப்புக்களையெல்லாம் தாண்டிவிட உம்மால் முடியும். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

உடல் நிலை ஊறுபடும். பித்த[illegible] பண்டு பணமளவில் ஓரளவு நல்ல வாரம். பழைய முதலீடுகள் நற்பலனைத்தரும்.

## முதன்மைத் தகுதிகள்

நீ விரும்பிய வகையில் வழிபாடு செய். குழந்தையைப் போல எளியனாக மாறு. உனது இதய அறைகளையெல்லாம் ஒளிவு மறைவின்றித் திறந்துவை. குள்ளத்தனத்தையும், கபடங்களையும் விட்டொழிப்பாயாக. எண்ணியதெல்லாம் எய்தப் பெறுவாய். கடவுள் எந்தச் சோதனையிலும் இடரிலும் உன்னைக் காப்பாற்றுவார். விசுவாசமுள்ள மெய்யடியார்கள் வழிபாட்டின் சக்தியைப் பற்ற அறிவார்கள் நேர்மை, கள்ளம் கபடமின்மை, விரும்பத்தக்க ஒழுங்குடைமை, அன்பு, பரோபகாரம் இரக்கம், சேவை ஆகிய குணதிசயங்களே உண்மைப் பக்தனுக்கு இருக்கவேண்டிய முதன்மைத் தகுதிகள்.

— சுவாமி சிவானந்தர்.

## சைவ நெறி வளர்க்கும் ... ...

( 4-ம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றுவித்து நடத்திவைத்தார்.

இவருடைய ஜென்ம ஊர் இளவாலை. இவர் 1926-ம் ஆண்டு வண்ணை நகருக்கு வந்து பல சமயத் தொண்டுகளையும் சமூகத் தொண்டுகளையும், சாதி சமய பாகுபாடின்றிச் செய்து வருகின்றார் இவருடைய பாரியாரும் இவரைப்போலவே தர்ம சிந்தையாளராகவும், தமது வாழ்க்கைத்துணைவர் செய்து வருப் கைங்கரியங்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகின்றார்.

திரு. கனகசபை அவர்கள் தானதருமம் செய்வதிலும், ஏழைகளுக்கும் பிறருக்கும் இன்னல்களைத் தீர்ப்பதில் சிறந்தவராகவும் இருக்கின்றார். தமிழ் மக்களுள் "கனவான்" என்னும் இலக்கணத்திற்கு உகந்தவராகவும் விளங்குகின்றார். இவர் பெயரை எல்லா "விழா" நிநிப்பததிரங்களிலும் காணலாம்.

தமிழ்மொழி, தமிழ்க் கலைகள், சைவசமயம் யாவற்றிலும் பேரபிமானம் பூண்டு விளங்கும் இப்பெரியாரும் குடும்பத்தாரும் நீடூழி வாழ்க!

## வில்லூன்றி விநாயகர் கொடி

எதிர்வரும் 14—5—63 செவ்வாயக் கிழமை யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் கோயிலில் கொடியேற்றத் திருவிழா நடைபெற இருக்கிறது.

## கிரிதாரிப் பிரசாத் வருவார்

மேமாதம் 15-ந்திகதி புதன் கிழமை மாலை நாவலப்பிட்டியில் நடைபெறவிருக்கும் விவேகானந்தர் நூற்றுண்டு விழாவில் கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்ற கோவை முன்னாள் நீதி-தி ஸ்ரீ கிரிதாரி பிரசாத் இங்கு வருகைதரவிருக்கிறார்.

மலேயாவில் நடைபெற்ற விவேகானந்தர் நூற்றுண்டு விழாவில் கலந்துகொண்ட ஸ்ரீ கிரிதாரிபிரசாத் தாயகம திருமபும வழியில் நாவலப்பிட்டிக்கு வருவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஐந்து தினங்கள்மட்டும் இலங்கையில் தங்கும் ஸ்ரீ. கிரிதாரி பிரசாத் யாழ்ப்பாணம். கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் சொறபொழிவாற்றுவார்கள்.

## "எல்லாம் தமிழியக்கம்"

எல்லாம் தமிழியக்கத்தின் ஒரு பகுதியாக மக்கள் அரசாங்கத்தோடு வைத்துக்கொள்ளும் சகல கடிதத் தொடர்புகளையும் தமிழில் ஆற்றும் முறையிலே பொது மக்களுக்கு அனுப்பப்படும் 63—64-ம் ஆண்டுக்குரிய வருமான வரிப் பத்திரம் ஆங்கிலத்தில் இருப்பின், திருப்பி அனுப்பி தமிழ்ப் பத்திரங்களை வரவழைத்து அதனைப் பயன்படுத்துமாறும், பத்திரங்கள் தமிழில் வழங்கும் ஒழுங்குகள் ஏற்கனவே செய்யப் பட்டிருக்கிறது என்றும் தமிழில் பத்திரத்தை நிரப்புதலில் எதுவித சிரமமும் இருப்பின் தம்முடன் தொடர்பு கொள்ளும் படியும் கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றத்தினர் கோரியுள்ளனர்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

சண்டிலிப்பாய், கல்வளை விநாயகராலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வழமைபோல் நடைபெற்றது. அத்தருணம் திரு. க. துரைசுவாமி அவர்கள் தலைமை தாங்கினர்.

திரு ம. சின்னையா அவர்கள் இச்சபையின் தேர்வுச் சபை அங்கத்தவர்களாக திருவாளர்கள் கா. இராசநாயகம், வே. அரசகுலசூரியர், கு அரசகுலசிங்கம், ஐ குமாரசுவாமி, நா. தம்பிராசா, இ. விசுவநாதன், நா. கணபதிப்பிள்ளை ஆகியோரைப் பிரேரித்தார்; திரு வை. குருகேசு அவர்கள அதை அனுவதித்தார்.

## பொது மொழியில் எழுதாமையால் ... ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திக்கொண்டு போவதும், இந்தியத் தமிழகத்துத் தமிழ், ஈழத் தமிழகத்துத் தமிழ், மலாயா சிங்கப்பூர்த் தமிழ், தென்னாபிரிக்காத் தமிழ், மொரிஷியஸ் தமிழ் முதலிய வெவ்வேறு நாட்டுத் தமிழினிடையே வேற்றுமையை வளர்த்து, காலப்போக்கில் வெவ்வேறு மொழிகளாக்கிவிடும். தாயகமான தமிழகத்துத் தமிழ் தமிழாக இருக்க ஏனையநாட்டுத் தமிழ்மொழிகள் (வேற்று மொழிகளும் இடையில் கலந்துவிட) வெவ்வேறு மொழிகளாகிவிடும்.

இன்றைய கன்னடியர் தெலுங்கர் துளுவர், மலையாளிகள், குடகர் முதலிய இனத்தவர்கள் பண்டைய தமிழர்கள்! இன்று தோன்றியுள்ள பேச்சு வழக்குஎழுத்தானது இத்தகைய தமிழரல்லாத வேறு மொழி பேசும் மக்களாக ஈழத்தமிழ்மக்களை மாற்றுவதற்கு ஐம்பதுவருட காலமே போதும். ஆகவே நாட்டிற்கு நாடு வேறுபடும் பேச்சு வழக்கில்எழுதுவது பெரும்கெடுதிக்குக காரணமாகிவிடும்".

இவ்வாறு, நேற்று வியாழக்கிழமை கட்டுவன் பாலர் ஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற வித்துவசிரோன்மணி கணேசையா நினைவு விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய கலாநிதி திரு. ஆ. சதாசிவம் குறிப்பிட்டார். வித்துவான் F. X. C. நடராசா, கா. சிவத்தம்பி B. A. திரு. இலக்குமணஐயர் முதலியோரும் பேசினர்.

கணேசையா பெயரில் திரு. சில்லையூர் செல்வராசன் தலைமையில கவியரங்கம் ஒன்றும் சிறந்தமுறையில் நடைபெற்றது.

திருவாளர்கள் இ. அம்பிகைபாகன், க. பே. முத்தையா, ச. வே. பஞ்சாட்சரம் இ. நாகராஜன், மு. செல்லையா, செ கதிரேசம்பிள்ளை, சொக்கன் ஆகியோர் கவியரங்கில் பங்குபற்றினர்,

பண்டிதர் இ. நமசிவாயம் தலைமைவகித்தார். பண்டிதர் வ. நடராசன் வரவேற்புரை நிகழ்த்தினர் திரு. வ. முத்துக்குமாருவினல் நன்றிகூறப்பட்டது.

## படிப்புப்பூர்த்தி

ஏழாலை தென்மேற்கு இந்துசமய விருத்திச் சங்கத்தினரால், ஏழாலை மேற்கு கருணாகரப்பிள்ளையார் மடாலயத்தில் சென்ற வெள்ளிக்கிழமை 3-5-63ல் விசேட அபிடேகம் நிகழ்த்தப்பட்டது.

மேற்படி ஆலயத்தில் திரு. செ. சின்னத்துரை மூன்று ஆண்டுகளாகப் படித்துவந்த விநாயகர் புராண வசனப்படிப்பும் அன்று பூர்த்தியாகியது.

பண்டிதர் வே சங்கரப்பிள்ளை அவர்களால் "கயமுகன் சங்காரம்" என்னும் கதாப்பிரசங்கமும் நிகழ்த்தப்பட்டது.

—0—

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாவலர் கண்ட கனவுகளை நனவாக்கும் அறநிலையம்

## சைவ பரிபாலன சபை

### சைவ ஆசாரங்களைப் பாதிக்கும் இன்றைய அரசியல் நிலை

சமயப்பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

நம் நாடுசெய்த தவத்தின் பேருக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் ஐங்காக் குரவராக அவதாரஞ் செய்து எங்கள் உயிரனைய சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் காத்தருளினர். சைவ நூல்களையும் தமிழ் நூல்களையும் வெளியிடுதலும், சைவ வித்தியாசாலைகளைத் தாபித்தலும், சைவப் பிரசங்கங்கள் நிகழ்த்துதலும் சைவசமய உண்மைகளை அறியாது மாறுபட்டவர்களுக்கு விளக்கப் பிரசுரஞ் செய்தலும் ஆகிய சாதனங்களைக் கைக்கொண்டார் தம்முடைய வாழ்நாளின் பின்பு இச்சிவதொண்டுகளைப்புரியஒருசபை அவசியமென்பதைத் தம்முடைய மாணவர்களுக்கும் ஏனைய சைவாபிமானிகளுக்கும் தெரியப் பண்ணினர்.

அவருடைய கருத்தை நிறைவேற்றவேண்டுமென்னும் விருப்பம் திருவருட்டுணையாக அவருடைய மாணவர்களிடத்திலும் அபிமானிகளிடத்திலும் உதித்தது. ஆகவே அப்பெரியாரின் திருவுள்ளப்படி 30-4-88-ல் அன்று நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சர்வதாரி ஞூ சித்திரை மீ மூல நட்சத்திரம் கூடிய திங்கட்கிழமை (30-4-88) யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை தாபிதமானது. முதலில் சபையின் தலைவராக வித்துவசிரோன்மணி திரு. ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களும் காரியதரிசியாக திரு. த. கைலாயபிள்ளை அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இரண்டாவதாண்டு சபைத் தலைவராக திருவனந்தபுரம் உயர்தர நீதிபதி திரு. த. செல்லப்பாபிள்ளை அவர்களும் காரியதரிசியாக திரு, V. காசிப்பிள்ளையவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். ஊர்கடோறும் சமயப்பிரசாரஞ் செய்தலை ஒரு முக்கிய பணியாகச் சபை மேற்கொண்டது. மாதகல் பிரம்மஸ்ரீ. ஏரமையர், கோண்டாவில் பிரம்மஸ்ரீ சங்கரசுப்பையர், கோப்பாய் திரு. வேலுப்பிள்ளை உபாத்தியாயர் ஆகியவர்களை நியமித்து இப்பணியைப் புரிந்தனர். பிரம்மஸ்ரீ சங்கரசுப்பையரவர்கள் பின்பு துறவு பூண்டு, சங்கரசுப்பையசச்சிதானந்த இராஜயோகிகளென அழைக்கப்பட்டனர். 1889-ம் ஆண்டில் இந்துசாதனம் தமிழ் ஆங்கிலப் பிரசுரங்களை வெளியிட ஆரம்பித்தனர்.

சைவப்பிள்ளைகள் சைவாசாரத்தை அநுட்டித்துக்கொண்டு ஆங்கிலக் கலவி கற்க வசதிகளில்லாமையையுணர்ந்து 1890-ம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு முன்னேடியாக வுள்ள இந்து உயர்தரப் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தனர். இவ்வித்தியாசாலையை விருத்தி செய்வதற்குச் சபையின் உறுப்பினராகவுள்ள திரு. த செல்லப்பாபிள்ளை, அப்புக்காத்து சி. நாகலிங்கம், திரு வி. காசிப்பிள்ளை திரு. சி. பசுபதிச் செட்டியார் முதலியவர்கள் பெரும் துணைபுரிந்தனர். டிை கல்லூரியின் நிர்வாகம் 1902-ம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையிடம் ஒப்படைக்கப் பட்டது.

சென்ற 75 ஆண்டுகளாகச் சபை ஆற்றிய பணிகளைப்பற்றி விரிவாகக் கூற இவ்விதழில் இடமில்லையாகையினல் சுருக்கமாக இதனை யெழுதுகின்றேம்.

சபையின் தலைவர்கள் காரியதரிசிகள் தனதிகாரிகளின் பட்டியலொன்று இப்பத்திரிகையில் பிறிதோரிடத்தில் வெளிவருகின்றது.

சிதம்பரத்தில் நம் முன்னேர்களால் பண்டைக்காலத்தில் 12 மடங்கள்வரையில் நிறுவப்பட்டன. அவற்றுளொன்று புண்ணியநாச்சி மட தருமமாகும். இத்தருமத்துக்குரிய சொத்துக்கள் மறவன்புலவு, கோயிலாக்கண்டி, கொக்குவில் மேற்கு, வண்ணூர்பண்ணை மேற்கு முதலிய இடங்களிலிருக்கின்றன இச்சொத்துக்களின் வருவாயை உபயோகித்து சிதம்பரத்தில் தினசரி கட்டளைப் பூசை செய்வித்தலும் அபிடேகங்கள செய்வித்தலும், புண்ணியநாச்சி மடத்தை நிருவகித்தலும் யாழ்ப்பாணத்தில் சைவசமய வளர்ச்சிக்குரிய பணிகள் புரிவதும குறித்த தருமத்தின் நோக்கங்களாகும. புண்ணியநாச்சி யம்மையாருடைய சந்ததியாருக்கும் பின்பு இத்தருமத்தைப் புண்ணியநாச்சிமடபரிபாலனசபைநிருவகித்து வந்தது. பின்பு 1934-ம ஆண்டில் குறித்த மட தருமபரிபாலனம் சைவ பரிபாலனசபையில் ஒப்படைக்கப்பட்டது. சிதம்பரதலத்தில் வருடந்தோறும் கட்டளை நடைபெறவும் அபிடேகம் நடைபெறவும் சபை ஏற்ற ஒழுங்குகள் செய்திருக்கின்றது.

சபையின் நிருவாக சபைக் கூட்டங்கள் நடைபெறவும், நூல்நிலையம் அமைக்கவும், குருபூசைகள் சமயபாட வகுப்புகள் புராணபடனம் முதலிய சற்கருமங்கள் நடைபெறவும சபைக்கு ஒரு தனி இடம வேண்டுமென்று தீர்மானித்து அவற்றை அமைக்க 1946 ம் ஆண்டில வண்ணூர் பண்ணை கிழக்கு கல்லூரி வீதியில் ஒரு நிலத்தைச் சபையார் விலைக்குப் பெற்றனர். 1947-ம ஆண்டில டக்ரர், எஸ், சுப்பிரமணியம் அவர்கள் இப்பொழுதுள்ள நாவலர் மண்டபத்துக்கு அத்திபாரமிட்டனர். 1950-ம் ஆண்டில் இம்மண்டபப் பிரவேசம் நடைபெற்றது. திருவருளை முன்னிட்டுச் சபையார் அக்காலம் தொடக்கம் குறித்த மண்டபத்தில் சமயத் தொண்டுகளைப் புரிந்து வருகின்றனர்.

மறவன் புலவிலுள்ள புண்ணியநாச்சி மடகருமக் காணிக்குள் அமைந்திருக்கும் தோப்புச்சிதம்பரம் சித்திவிநாயகராலயமும் கோயிலாக்கண்டிச் சிவாலயமும் சங்கானைச் சிவன் கோயிலாலயமும் சபையின் நிருவாகத்திலிருக்கின்றன. சபைத் தலைவராயிருந்த திரு. இ. சிவகுருநாதர் அவர்களின் அருமைப் பாரியார் திருமதி விசாலாட்சியம்மையார் நாவலர் ஆச்சிரமத்துக்குச் சிறந்த அங்கமாக சிவபூஜாமண்டபம், மடைப்பள்ளி உட்பட ஒரு கட்டடத்தை உதவியுள்ளார்.

பண்டைக்காலந் தொடக்கம் வேதாரணியம் குருக்கள்மார் நீராவியடி, தொல்புரம், அளவெட்டி, புலோலி, கொழும்பு முதலிய இடங்களில வசித்து சைவத் தொண்டு புரிந்து வந்தனர். இப்பொழுது இலங்கை சுதந்திரம் அடைந்தபின்பு குறித்த குருக்கள்மார் இங்கு வசித்துச் சமயத் தொண்டு புரிந்து வருவது கட்டமாகிவிட்டமையினல் அவர்களுடைய தொகை அருகிவிட்டது. சபையின் முயற்சியினல் 1954-ம் ஆண்டில் 25 குருக்கள்மார் இங்கு தங்கி சமயத்தொண்டு புரிய அரசாங்கம் அநுமதியளித்தது. இவர்களுள் இந்நாட்டைவிட்டு விலகுகின்றவர்களுக்குப் பதிலாகத் தகுந்த வேதாரணியம் குருக்கள்மாரை வருவிக்கவும் அநுமதிகிடைத்தது. இப்பொழுதுள்ள அரசாங்கம் அச்சலாக்கியத்தை மறுக்க முயலுகின்றது. சபையார் குறித்த அநுமதி வழங்குவதை நிரந்தரமாக்கும்படி அரசாங்கத்துக்கு மனுச் செய்திருக்கின்றனர்.

வேதாரணியத்திலுள்ள சிவாலய நெய்விளக்குத் திருப்பணிக்கும் கார்த்திகை மட நிருவாகத்துக்கும் நம் முன்னேர்கள பெருமதிப்புள்ள ஆதனங்களைத் தருமசாதனஞ் செய்துள்ளனர். அவற்றின் நிருவாகம் நீராவிமடத்திலுள்ள குருக்கள்மாரிடம் ஒப்படைக்கப்பட்டது நீராவிமடக் குருக்கள்மார் இப்பொழுது இங்கு தொண்டுபுரிவது சாத்தியப்படாமையினல் குறித்த மட தரும நிர்வாகத்தைச் சபையார் கைக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

சபையின் முக்கியதொண்டாக விளங்குவது சைவப்பிரகாசயந்திரசாலையை நிருவகித்தலாகும. இவ்வியந்திரசாலையிலேயே சபையினுடைய இந்துசாதனம் தமிழ் ஆங்கிலப் பிரசுரங்களும், சமய நூல்களும், இலக்கிய நூல்களும் வெளிவருகின்றன.

இப்பொழுதுள்ள அரசியல் முறையினல் எங்கள் தாய்மொழி, சமயம், ஆசாரம், நாகரிகம் பெரிதும் பாதிக்கப்படுகின்றன இக்குறைகளை நிவர்த்தி செய்யக்கூடிய முயற்சிகளைச் சபையார் புரிந்து வருகின்றனர்

தனிப்பட்ட ஒருவரது அல்லது ஒரு சமூகத்தினது இடரை நீக்க வல்லது இறைவன் திருவடிக்கன்பேயாகும். மக்கள் உள்ளத்தில் இறைவன் திருவடியன்பை வளர்ப்பதையே எங்கள் சபை முக்கிய தொண்டாகச் சென்ற 75 ஆண்டுகளாகச் செய்து வருகின்றது. அக்குறிக்கோளதான் சபையை இதுவரை காலம் தொண்டாற்றச் செய்தது. இந்நோக்கத்தையே சபை எதிர்காலத்திலும் கைக்கொள்ளும. அதற்குப் பலலாண்டுக்காலம் நமது நாட்டில் தொண்டு புரியக் கடவுள் துணை நல்குவாராக.

---

## ஈழத்தில் சமய ... ... ...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பாணத்தின் பல பாகங்களிலும் உள்ள சம்ஸ்கிருத ஞானம் படைத்தவர்களுள் அநேகர் சிவசங்கர பண்டிதரவர்களிடமோ அல்லது அவர் மாணவ பரம்பரையிலோ கற்றவர்களாவர், இவர்களைவிட இந்தியாவிலிருந்தும் பல அறிஞர்கள் தமது சந்தேக விபரீதங்களை நீக்கப் பண்டிதரவர்களிடம் வருவார்கள்.

இங்ஙனம் மாணவர்க்குக் கற்பித்ததோடமையாது சற்பிரசங்கங்கள் செய்வதிலும் நூல்கள் உரைகள் செய்வதிலும் மிகச் சிறப்புடையவராஞர். நாவலரவர்கள் விருப்பப்படி வண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலையிலும், இந்திய அறிஞர்கள் விருப்பப்படி திருமறைக்காடு, சிதம்பரம், திருவாரூர் முதலிய இடங்களிலும் பிரசங்கங்கள் நடைபெற்றன. சிவனது பரத்துவமபற்றி வேத உபநிடத, புராணப் பிரமாணங்கள் காட்டி இவர் வடமொழியில் செய்த சொற்பொழிவு மிகப் பிரசித்தி பெற்றது.

பண்டிதரவர்கள் தாம் பெற்ற இன்பம் இவ்வையகமும பெறவேண்டுமென்னும் பெருவிருப்பால் யாவரும் எளிதில சம்ஸ்கிருதம் கற்பதற்கு உதவியாகச் சொற்களை ஒழுங்கு செய்து தாதுமாலை, சப்த சங்கிரகம் முதலிய நூல்களையும் பல உரைகளையும் எழுதியுள்ளார். இவரியற்றிய தமிழ் நூல்களுட் சைவப்பிரகாசனம் முக்கியமானது. சம்ஸ்கிருதத்தில் அவருக்கிருந்த சொல்லாட்சி, தருக்கித்து சரியான எவற்றையும்நிலைநாட்டும்திறமை, சமயப் பொருள்களைத் தெளிவாக நிரூபிக்கும் சாமர்த்தியம், மிகப் பெரிய கடினமான காரியங்களையும சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் மாண்பு என்பன இந்நூலாற் புலனுகும்.

அவருடைய தொண்டுகளில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது ஆறுமுகநாவலர் அவர்கட்கு உசாத்துணை நண்பராக இருந்து அவர் காலத்தில் செய்த தீவிரமான சமயப் பணிகளில் ஒத்துழைத்தமையாகும். சம்ஸ்கிருதம் பேச்சு வழக்கிறந்து பொது மக்கட்கு அப்பாற்பட்டிருந்த காரணத்தால், சமயப் போர்வையிற் தவறுகளை வளர்த்த பலர் தமது தவறுகள் சரிகளே யென்றும், அவற்றுக்கு வேதமே ஆதாரமென்றும் சொல்லிப் பொதுமக்களை ஏமாற்றி வந்தனர். அவற்றைக் களைந்தெறிய முயன்ற நாவலருக்கு, வேத சிவாகமச் செம்பொருட் துணிவைத் தெளியவும், துணிவாக எடுத்துக் கூறவும் சங்கர பண்டிதரவர்களின் சம்ஸ்கிருதப் புலமை ஊன்றுகோலாயிருந்தது. பெரிய புராண சூசனத்தில் நாவலரவர்கள்எழுதிய சிவபரத்துவம், உபோற்காதம், சிதம்பரமகிமை, வேதாகம உணர்ச்சி என்னும் பகுதிகளின்மூலம் சம்ஸ்கிருதத்தில் அவருக்கிருந்த பயிற்சியும் அப்பயிற்சிக்குத் தோன்றாத்துணையாயிருந்த சங்கர பண்டிதரவர்களின் விற்பத்தியும் புலனுகும். இவ்விருவரும் தமிழ்த் தோத்திரப் பாமாலைகளாகிய தேவார திருவாசகங்கள், வடமொழி மந்திரங்கட்குச் சமமான தகுதிவாய்ந்தவை என்பதை நன்குணர்ந்து அவ்வருட்பாக்களைப் பக்தி சிரத்தையுடன் தினமும் பாராயணஞ் செய்தவர்கள்.

ஆகவே திருவருளின் துணையாலும் தமது முயற்சியாலும் சிவசங்கர பண்டிதரவர்கள் மிகக்குறுகிய நாற்பத்திரண்டாண்டு வாழ்க்கையிற் பெற்ற சம்ஸ்கிருத அறிவும் அவர் அக்காலத்திற் செய்த பணிகளும் சமயத்துறையிற் புதிய மலர்ச்சியையும் தமிழ்த் துறையில் அதிக வளர்ச்சியையும் ஊட்டி ஈழத் தமிழகத்தை உயர்ச்சியடையச் செய்தன. வளர்ந்து வரும் நச்சுக் கருத்துகளால் இங்கு அதிக கேடுகள் விளையவில்லையென்றும், நல்ல சித்தாந்த பரம்பரை இங்கு தொடர்ந்து வருகின்றதென்றும் தமிழ்நாட்டறிஞர் பலர் போற்றுகின்றூர்கள். இத்தகைய பெரிய அத்திபாரத்தையிட்ட பெருமை சிவசங்கரபண்டிதரவர்களுக்குண்டு.

டாக்டர்ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறியதுபோல பரிபூரண கல்விமான்களும் ஒழுக்க நலம் மிக்க ஆசிரியர்களுமே இன்றைய உலகின் மிகப் பெரிய தேவைகள். ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதா அவர்களின் அடிச்சுவட்டைப்பின்பற்றி அவரைப் போன்ற வியத்தகு கல்விமான்களும் ஆசிரியர்களும் தோன்றி மனித குலத்துக்கு வழிகாட்ட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## கந்தபுராணவுரை வெளியீட்டு நிதி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் வெளியிடப்படவிருக்கும் கந்தபுராண வுரை வெளியீட்டுக்கு நன்கொடையாகவும் சந்தாவாகவும் இதுவரை பொருளுதவிய அன்பர்களின் பெயர்களை முன் வெளியிட்டுள்ளோம். உரை வெளியீட்டுக்கு 20000/- க்கு மேல் வேண்டியிருப்பதால் தயவு செய்து அன்பர்கள் இந்தப்புண்ணிய தொண்டில் பங்குபற்றித் தங்களால் இயன்ற பொருளுதவியைப் புரியுமாறு விநயத்துடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்,
1-1-63.

க. வேலுப்பிள்ளை,
தனதிகாரி,
கந்தபுராணவுரைவெளியீட்டுக்குழு

## நாவலர்கட்டுரைப்போட்டி

[ 2-ம் பக்கத் தொடர்ச்சி ]

**செல்வன்:** வை. விநாயகமூர்த்தி, அருணோதயக்கல்லூரி, அளவெட்டி.

**செல்வன்:** க. சிவபாலன், முதிர் ஆரம்ப. சி. த. ப. வகுப்பு 'A', இந்துக்கல்லூரி, காரைநகர்.

**செல்வன்:** A, செல்வராசா, ஆ சி. வகுப்பு, வீரசிங்கம் வித்தியாசாலை, மீசாலை வடக்கு.

**செல்வன்:** ச அரியக்குட்டி, அருணோதயக்கல்லூரி, அளவெட்டி.

**செல்வன்:** மு பராசசிங்கம், அருணோதயக்கல்லூரி, அளவெட்டி.

**செல்வி:** பொ. சூரியபகவதி, நாவலர் பாடசாலை, வண்ணார்பண்ணை.

**மற்றையோர் பிரிவு:**
பரிசு பெறுவோர்

**1-ம் பரிசு:** செல்வி, ஆ பரமு, பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.

**2-ம் பரிசு:** செல்வி S. சின்னையா B. A. விரிவுரையாளர் இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்,

**3-ம் பரிசு:** பண்டிதர். த சுப்பிரமணியம், பாக்கிய வாசம் சித்தன்கேணி.

**பாராட்டுப்பத்திரம் பெறுவோர்:**

சைவப்புலவர். வ. கந்தசாமி,
55 பிறவுண்வீதி, நீராவியடி.
திருமதி. ம பாலச்சந்திரன்,
23 சுவாமியார்வீதி, யாழ்ப்பாணம்.
திரு. சி. சீவரத்தினம் ஆசிரியர்,
நாவலர் வித்தியாசாலை, வண்ணார்பண்ணை.
த. மாலோகமணி, கிழ்கரவை, கரவெட்டி.
செல்வி. யோகேஸ்வரி வைத்திலிங்கம்,
2/14 மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம்.
திரு. வை. முத்துக்குமாரசுவாமி B. A
85/5 பிக்கறிங்ஸ் வீதி, கொழும்பு 13

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

திருவதிகை - மனவாசகங்கடந்தார்
அருளிச் செய்த

## உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

( முற்றொடர் - 17 )

### சிகாராதி நகாராதி பஞ்சாக்கரவியல்பு

சிவனரு ளாவி திரோதமல மைந்தும்
அவனெழுந் தஞ்சி னடைவாம் — இவனின்று
நம்முதலா வோதிலருள் நாடாது நாடுமருள்
சிம்முதலா வோதுநீ சென்று 41.

கொ—கூ: சிவன் அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும் அவன் அஞ்சு எழுத்தின் அடைவு ஆம்; (ஆயினும்) இவன் நின்று, 'ந' முதலா(க) ஓதில் அருள் நாடாது; (ஆதலால்) நீ சென்று (பொருந்தி) 'சி' முதலா(க) ஓது; (அதனால்) அருள் நாடும்.

ப—ரை; சிவன் அருள் ஆவி திரோதம் பலம் ஐந்தும்- சிவன் திருவருட்சத்தி ஆன்மா திரோதானசத்தி மும்மலம் என்னும் ஐந்தும், அவன் அஞ்சு எழுத்தின் அடைவு ஆம் அவ் இறைவனது பஞ்சாக்கரத்தின் உண்மைப் பொருண் முறைமையாம்; ஆயினும், இவன் நின்று - பக்குவமடைந்த இவ் ஆன்மா பொருந்தி நின்று, 'ந' முதலா ஓதில் - திரோதான சத்தியாகிய நகாரம் முதலாக உச்சரித்தால், அருள் நாடாது - திருவருள் வந்து அணையாது; ஆதலால், நீ சென்று 'சி' முதலா ஓது - நீ சிகாரம் ஆகிய சிவம் முதலாக நின்ற பஞ்சாக்கரத்தைப் பொருந்தி உச்சரிப்பாயாக; அருள் நாடும் - அங்ஙனம் உச்சரிப்பதனால் திருவருள் உன்னிடம் வந்து பொருந்தும்.

பெத்த நிலைப்படுத்துவதாகிய மலம் திரோதம் இரண்டும் பின் நிற்க அவற்றினின்றும் நீங்கி, ஞான ஒளியாகிய அருளை முன்னிட்டு, அதன்வழிப்படுதலினாலேயே ஆன்மா இறைவனை அடைய முடியுமென்பார் 'ந' முதலாக ஓதில் அருள் நாடாது என்றும் 'சி' முதலாக ஓது (அதனால்) அருள் நாடும் என்றும் குறிப்பிட்டார். பக்குவமடைந்த ஆன்மாவாகிய உண்மைமார்க்கத்து மாணவகனுக்குச் "சிகாராதி பஞ்சாக்கரமே யோதுக" எனத் தேசிகர் பணித்தமையான், ஏனைப் பக்குவமில்லாத உபாய மார்க்கத்தார் தம் உலக இன்ப அனுபவ நிமித்தம் நகாராதிபஞ்சாக்கரம் ஓதுதற்குரியர் என்பதும் குறிப்பானுணரவைக்கப்பட்டது. சிகாராதிபஞ்சாக்கரத்தைச் சூக்கும பஞ்சாக்கரம் அல்லது முத்திபஞ்சாக்கரம் எனவும், நகாராதிபஞ்சாக்கரத்தைத் தூல பஞ்சாக்கரம் எனவும் கூறுப. இவையன்றி, காரணம், மகாகாரணம்: மகாமனு என மேலும் மூவகைப் பஞ்சாக்கரமுமுள. அவற்றுள், காரண பஞ்சாக்கரமாவது யகாரமாகி ஆன்மாவுக்கு முன்னும் பின்னும் எதிர் நிரனிறையாகச் சிகார வகாரங்கள் நிற்க அமைவதாம். இதற்கு அதிசூக்கும பஞ்சாக்கரம், முத்திபஞ்சாக்கரம், இருதலைமாணிக்கம், இருதலைக்கொள்ளி என்பன மறு பெயர்கள். மகாகாரண பஞ்சாக்கரமாவது, யகாரமாகிய ஆன்மா வகாரமாகிய அருள்வயப்பட்டு அதனோடு சேர்ந்துவிட, (ஆன்மாவென வேறொன்றின்றிச்) சிகார வகாரமாகிய இரண்டெழுத்து மாத்திரையாய் நிற்பதாம். மகாமனுவாவது, மகாகாரண பஞ்சாக்கரமாய் நின்ற சிகார வகாரங்களிரண்டினுள், வகாரம் சிகாரமாகிய சிவத்தினுள் அடங்கிச் சிகாரமாகிய ஓரெழுத்து மாத்திரையாய் நிற்பதாம். இதனை நாயோட்டு மந்திரம் எனவும், இறையெழுத்து எனவும், பெருவெழுத்தெனவும் கூறுப. இங்கே கூறப்பட்ட ஐவகைப் பஞ்சாக்கரமும் ஆன்மாவின் பக்குவதாரதம்மியத்தின்படி சாதனை செய்தற்குரிய.

பொழிப்பு: சிவன் முதலான ஐந்தும் திருவைந்தெழுத்தின் பொருள் முறைமையாம் பக்குவமுடைய ஆன்மா நமசிவய என ஓதினுல் அருள் பொருந்தாது; சிவயநம என ஓதினுல் அருள் பொருந்தும்; ஆதலால் (உண்மைமார்க்கத்துக்குரிய) நீ சிவயநம என உச்சரிப்பாயாக.

—தொடரும்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 5173.
சித்தம்பலம் கந்தையா
அராலி தெற்கு —வழக்காளி
எதிராக
1. நமசிவாயம் துரைரட்டினமும்
2. பெண் ராசரட்டினம்
3. கணவதிப்பிள்ளை கைம்பெண் கனகாம்பிகை
நம்பர் T 475 D. C. J தத்துவ வழக்கில் தத்துவகாரி
அனைவரும் அராலி கிழக்கு
—எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5173 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணி 1963ஆ ஆனிமீ 15உ (15-6-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபா 2106-ம். இதற்கு ரூபா 1440-க்கு 23-10-62 தீர்வைத் திகதி தொடக்கம் 7-2-63 வரை 100-க்கு 9 வீத வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 184-25.

காணிகளின் விபரம்;

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வட்டுக்கோட்டைக் கோயிற்பற்று அராலி கிழக்கு இறை "குன்றபத்தை" பரப்பு லாச்சம் 7 ஆனல் இப்போதைய சேவையர் பிளான்படி பரப்பு லாச்சம் 7¼-ம் பனைகளும் வான்பயிர் செய்பயிர்களும். இதற்கு முந்திய உறுதிப்படி எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை, வடக்கும் மேற்கும் வலலிபுரம் தம்புவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். இந்த எல்லைப்படி சகல உரித்துகளும் இது அடங்கலும். பதிவு இலக்கம் E 23/128.

2. மேற்படி அராலி தெற்கும் வடக்கும் முன் உறுதிப்படி புளியடிப்புலம் என்னும் காணி 3 லொற் ஆக பரப்பு நெல்லுலாச்சம் 23¼. இதில் கிழக்குப்பக்கமாகப் பரப்பு நெல்லுலாச்சம் 14-ம் அதைச் சேர்ந்தவைகளும் முன் உறுதிப்படி இதற்கு எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு பத்திரகாளி அம்மன் கோயிலுக்கும் தம்பித்துரை பெண் செல்லம்மாவுக்குரிய ஆதனங்கள், மேற்கு முருகேசு மருதப்புக்கும் பெண் சிவகாமிப்பிள்ளைக்குரிய ஆதனம், தெற்கு குலத்துங்கபிள்ளை கனகசபையின் ஆதனம். இந்த எல்லைப்படி இது அடங்கலும் பதிவு இலக்கம் E 270/277.

சி. செ. மாரிமுத்து,
கொம்மிசனரும்,
விலைமதிப்பாளரும்.

விதானை வளவு
சித்தன்கேணி
30-4-63.
M. 24 10-5-63.

### விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக் கோட்டில்
அல்வாய் மேற்கு கணபதிப்பிள்ளை கந்தவனம்
— வழக்காளி.

இல, 7677

எதிராக
ஷெ யூர்

1 முருகுப்பிள்ளை சிவலிங்கம்
2 கந்தையா கனகசபை
3 பெண் செல்லம்மா
4 கந்தவனம் கணபதிப்பிள்ளை
5 பெண் அழகம்மா
6 சிதம்பரப்பிள்ளை கணபதிப்பிள்ளை
7 கதிரிப்பிள்ளை சுப்பிரமணியம்
8 பெண் சின்னச்சிப்பிள்ளை
9 கணபதிப்பிள்ளை கைம்பெண் வள்ளிப்பிள்ளை
10 ஆறுமுகம் பொன்னையா
11 பெண் செல்லம்
12 கணபதிப்பிள்ளை கந்தவனம்
13 பெண் பொன்னம்மா
14 சபாபதிப்பிள்ளை கந்தையா
15 பெண் குஞ்சிப்பிள்ளை
16 வல்லிபுரம்கிருட்டிணபிள்ளை
17 பெண் தெய்வானை
18 கணபதிப்பிள்ளை கதிர்காமத்தம்பி
19 வல்லிபுரம் பொன்னையா கைம்பெண் தெய்வானை
20 ஆறுமுகம் கந்தவனம்
21 பெண் சின்னத்தங்கம்
22 பொன்னையா முத்துக்குமாரு தன் சார்பிலும் 20-ம், 21-ம் எதிரிகளின் தத்துவகாரன் என்ற வகையிலும்
23 பெண் சிவமணி
24 கணபதிப்பிள்ளை தில்லைநடராசா
25 ஆறுமுகம் கணபதிப்பிள்ளை மகள் தங்கமணி
26 ஆறுமுகம் சிதம்பரநாதன்
27 கதிர்காமர் சின்னத்தம்பி ஷெ 26-ம் எதிரியின் தத்துவகாரன்
28 வல்லிபுரம் பெரியதம்பி மகள்
29 கோ, கந்தையா சிதம்பரப்பிள்ளை
30 கோ, கந்தையா சிதம்பரப்பிள்ளை
31 பெரியதம்பி வல்லிபுரம்
32 சண்முகம் சின்னத்தம்பி கைம்பெண் வள்ளிப்பிள்ளை
33 சீனிவாசகம் சிதம்பரப்பிள்ளை
34 பெண் கதிராசிப்பிள்ளை
35 ஆறுமுகம் முருகுப்பிள்ளை
36 ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை
37 முருகுப்பிள்ளை தம்பையா
38 முருகுப்பிள்ளை கணபதிப்பிள்ளை
39 பெண் பாறுவதிப்பிள்ளை
40 வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை
41 பெண் வள்ளிப்பிள்ளை
42 சின்னத்தம்பி பொன்னையா
43 சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை

அல்வாய் மழவராயர் குறிச்சியிறை கோணவளை லி. பர. 14 5/8 தோட்டம 3½ வீடு 1

என்னும் ஆதனம் 1951-ம் ஆ 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கு அமைவாக ஷெ கோட்டின் 7677-ம் இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கிறதென்று இத்தால் உமக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1963-ம் வருஷம் ஆனி மாதம் 26-ந் திகதி 10 மணிகு சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்,

கோட்டாரின் கட்டளைப்படி
ஒப்பம் V. நடராசா
சக்கடத்தார்
1963-ம் ஷு வைகாசி மீ 2உ
M. 23 10-5-63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணிக்கு "சைவ சித்தாந்த சாகரம்" என்னும் பட்டமளிப்பு

## சமயக் கட்டுரைகள் நூல் வெளியீட்டு விழாவில் அறிஞர் பாராட்டு

பண்டிதமணி அவர்கள் தம்முடைய கோடுநோவை யும் பொருட்படுத்தாமல் சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந் தொண்டாற்றி வருகிறார்கள். நாவலர் பரம்பரையில் வந்தவர்கள். மரபுபேணி வாழ்ந்துவரும் ஓர் அறிஞர் தமது குணாதிசயங்களைத் தம்முடைய மாணவர்கள்மீது அப்படியே பதியச் செய்துவிட்டார். இதுவே அவர்களது தனிச் சிறப்பு என்று நூல்வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய முன்னாள் உப வித்தியாதிபதி திரு. க. ச. அருள்நந்தி அவர்கள் கூறினார்கள்.

பழனி அங்கப்பா கோஷ்டியினரின் நாதஸ்வர இசை முழங்க பழைய மாணவர்கள் அபிமானிகள் மிகவும் திரளாகக் கூடி சரித்திரப் பிரசித்தி வாய்ந்த வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்து பண்டிதமணி அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபம் மகர தோரணங்களாலும் கடதாசி அலங்காரத்திலும் மிக்கு விளங்கியது.

திரு. த. இராசேந்திரம் அவர்களதுவரவேற்புரையை அடுத்து தலைமையுரை நிகழ்ந்தது ஈழநாடு பத்திராதிபர் கே. பி. ஹரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கும்போது "பண்டிதமணி அவர்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களையெல்லாம் தொகுத்து வெளியிட்ட "சமயக் கட்டுரைகள்" என்னும் இந்நூல் எமக்கு ஓர் அரிய கருவூலமாகும். இதனால் நாங்கள் பண்டிதமணி அவர்களுக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளோம். பண்டிதமணியின் பழைய மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டு இந்த அரிய கைங்கரியத்தை யாற்றி யுள்ளனர். இந்நூல் எல்லா இடங்களிலும் பரவிப்பெருகவேண்டும்" என்று குறிப்பிட்டார். விழாக் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம், பௌதிகப் பேராசிரியர் அ. வி. மயில்வாகனம், சமஸ்கிருதப் பேராசிரியர் டக்டர் கா. கைலாசநாதக்குருக்கள், சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் முதலிய பெரியோர்களது வாழ்த்துரைகளை வாசித்து நன்றியும் தெரிவித்தார்.

திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை நல்ல சைவச் சூழலில் வளர்ந்த தென்றும் அங்கு குரு சீட பரம்பரை வளர்ந்து வந்தமைக்கு இவ்வெளியீட்டு விழாவே சான்றாகும் என்றும் விற்பனையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் அவர்கள் கூறினார்கள்.

வைத்தியத்தாத்தாவாகிய டக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்கள், பண்டிதமணி ஒரு பேரறிஞர் அவர் நாட்டுக்கும் நமக்கும், பிற்காலச்சந்ததியாருக்கும் பயன்படத்தக்க வகையில் இந்த அரிய நூலைச் செய்துதந்திருக்கிறார் பண்டிதமணி அவர்கள் நீடூழி வாழ வேண்டும் என்று முதலாவது பிரதியைப் பெற்றபோது உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார்.

பண்டிதமணி சான்றோர்களாகிய புலவர்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் என்று பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை அவர்களும், பண்டிதமணியின் நூல் கிடைப்பதற்கரியதொரு சித்தாந்தக் கருவூலம் என்று வித்துவான் பொன். முத்துக்குமாரன் அவர்களும் குறிப்பிட்டார்கள்.

நாவலர் பரம்பரையில் வந்து நாவலர் அடி போற்றி வாழும் பண்டிதமணி அவர்களே நாவலர் சரித்திரம் எழுதக்கூடிய ஒரு பெரியார் என்றும், அவர்கள் நாவலர் சரித்திரம் எழுதி சைவ உலகும், தமிழ் உலகும பயன்பட ஆவன செய்யவேண்டும் என்றும் பண்டிதர் சா. பொ இரத்தினம் அவர்கள் வேண்டுகோள்விடுத்தார்.

இறுதியாக விமர்சனம் செய்த திரு. கி. இலக்ஷ்மணன் அவர்கள் பண்டிதமணி தமது தொல்காப்பிய உணர்ச்சியினூடே அரிய பெரிய சித்தாந்தக் கருத்துக்களை இந்த நூல் வாயிலாக எமக்குத் தெரிவிக்கிறார்கள் என்றும், சமயக் கட்டுரைகள் என்னும் இவ்வரிய நூலை ஹிந்தியில் மொழிபெயர்ப்பது அவசியமாகுமென்று குறிப்பிட்டார்கள்.

சபையோர்களது பலத்த கரகோஷங்களுக்கிடையே பண்டிதமணி அவர்களுக்கு, "சைவ சித்தாந்த சாகரம்" என்னும் கௌரவப்பட்டத்தை தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

பண்டிதமணி அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

---

## தலைசிறந்த பக்தி

1-ம் பக்கத் தொடர்ச்சி

வரையில் இந்த அன்பு நெறியே சங்கரருடைய தத்துவ ஞானத்தை விட முக்கியமானதாகும். ஆழ்வார்கள் அருளிய நாலாயிரப் பிரபந்தத்திலுள்ள பாடல்கள் உலக இலக்கியத்திலேயே பக்திச்சுவை நிறைந்த பாடல்களுள் சிலவாகும். அவை செய்யும் உபதேசத்தின் மிக முக்கியமான பகுதி சாதி, பதவி, பண்பாடு என்னும் வேறுபாடு யாதுமின்றிக் கடவுள் எல்லோர்க்கும எளியன் என்பதும, எல்லோரும் பக்தியினாலும் பிரபத்தியிலும் முத்தி அடையலாம என்பதுமாகும். ஆழ்வார்களுக்குப் பின்வந்த ஆசாரியர்கள் கல்விமான்களும தத்துவ ஞானிகளுமாவர் ஆசாரியர்களுள் தலைசிறந்தவர் இராமானுசர்.

வைணவ மதத்திற்குப் பன்னிரண்டு ஆழ்வார்கள எப்படியோ, அப்படியே சைவ மதத்திற்கு அறுபத்துமூன்று நாயன்மார்கள். சைவ ஆசாரியர்கள் சைவசித்தாந்தத்தை வகுத்தார்கள். அவர்களுள் முதன்மையானவர் மெய்கண்டதேவர். நாயன்மார்களுடைய தோத்திரப்பாக்கள் பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் பதினொரு திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றன. சிவபெருமானை ஆண்டவனாகவும், தந்தையாகவும், காதலனாகவும் பாவித்து அன்பு செய்யும தோத்திரங்களாக உள்ள இப்பாசுரங்கள் உலகத்துப் பக்தி இலக்கியங்களுள் மிகச் சிறந்தனவாக விளங்குகின்றன.

இராமானந்தர், கபீர், நானக், மீராபாய், வல்லாசைதன்யர், துளசிதாசர், துகாராம் ஆகியோரும் எண்ணிறந்த பக்திப் பாடல்களைப் பாடினர். நாட்டில் பல்வேறு பக்தி இயக்கங்கள் தோன்றிய போதிலும் அவற்றினிடை கீழ்க்கண்ட பொதுவான கூறுகள் காணப்பெறறன

1. அன்பும் அருளும் நிறைந்த கடவுளுண்மையில் நம்பிக்கை.
2. ஆன்மாககள் தனித் தனி என்பதில் நம்பிக்கை.
3. வீடு அடைவதற்குக் கரும ஞானங்களை விடப் பக்தியே சிறந்த சாதனம் என்னும் எண்ணம்.
4. குருபக்தியும் மந்திர வாயிலான தீட்சையும.
5. சாதிவேற்றுமை பாராட்டாமை.
6 சமய உணர்ச்சியை வெளியிட மககள் பொதுவாகப் பேசும் தமிழ் முதலிய மொழிகளைப் பயன படுத்தல்.
7. இறைவன் நாமத்தைச் செபித்தலால் நன்மை உணடென்னும நம்பிக்கை.

இந்தப் பக்தி இயக்கங்கள 18-ஆம் நூற்றாண்டின மத்தியிலிருந்து 19-ஆம் நூற்றாண்டின் மத்திவரை வளர்ச்சி குன்றிப் போயிருந்தன. அதன்பின் ஆங்கிலக கல்வியும, மேனாட்டு விஞ்ஞான நாகரிகமும், பிரமசமாஜம், ஆரியசமாஜம், இராமகிருட்ண இயக்கம போன்ற பல புகழ் பெற்ற மத இயக்கங்களைத் தோற்றுவித்தன. பல இந்துமத போதகர்கள் தோன்றி, இந்துமதத்தைத் தூய்மைசெய்து, அதன் உண்மைகளைத் தம அனுபவ வாயிலாக உறுதி செய்து, ஐரோப்பா, அமெரிக்கா போன்ற பரந்த உலகத்தார்க்கும் அதன் சாரத்தையும் பெருமையையும எடுத்து ஓதிவந்தார்கள்.

இந்த நிலையிலேதான் இந்துசாதனமும் தொடங்கியது நமககு முன்னே உள்ளபெருமககள் சென்ற பாதையிலே அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை முடிப்பதற்காகவே இந்துசாதனம் உழைத்து வருகின்றது ஆங்கில தமிழ் வெளியீடுகள் இரண்டும் இந்துசமய வளர்ச்சிக்காகவே ஏற்பட்டவை.

இந்துசமயத்தைச் சாதனை செய்யும் ஒவ்வொரு இந்துவுக்கும இந்துசாதனம அவசியம் என்பது சொல்லாமலே அமையும. ஒவ்வொரு இந்துவினுடைய வீட்டிலும் ஒவ்வொரு இந்துசாதனம புகுந்தால் இந்துசாதனம் வளரும இந்துக்களின் சாதனையும் வளரும்.

---

## மாயாவாத துச்சகோளரி

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

தத்த மாற்றங் கணூறவிய சமயிகள் பலருங்
கத்து புன்சொலை வினவின ரவன்செயல் காணார்;
சுத்த வாதுள முதலிய தந்திரத் தொகுதி
உய்த் துணர்ந்திடு நீரரே ஒருசிறி துணர்வார்.

[இங்கே சமயிகள் என்றது திருவருள் நீதியை விசாரியாது பொய்வந்துழலுஞ் சமயநெறிப் புகுந்தோரை] இவ்வாறு சுப்பிரமணியப்பெருமானின் பெருமைகளை எடுத்துப் பேசினன் சிங்கமுகாசுரன். சூரபன்மனுக்குச் சிரிப்பு வந்தது. உடனே சுக்கிரனுபதேசத்தைச் சிங்கனுக்கு ஒப்பித்தான்.

பிரமமாகிய ஒருபொருள் உயிரெனப் பேர்பெற்
றுருவ மெண்ணில கொண்டுதன் மாயையா லுலப்பில்
கரும பேதங்க ளாற்றிடும் பலபுனற் கடத்துள்
இரவி தன்னுருத் தனித்தனி காட்டிய இயல்பின்.

கடந்த கர்ந்தழி அவற்றிடைவெளி ககனத்தோ
டடைந்த வாறபோல யாக்கையின் பேதகமனைத்து
மூடிந்த காலையிற றென்மைபோல பேதமா மொழிக்குந்
தொடர்ந்த சிந்தைக்கு நாடொறு தமர் பெருஞ்சோதி

பிரமமே இவர் அல்லவர் இவரெனப் பேதித்
திருமையாகவே கொள்ளலை; யாக்கையே வேறு
பரமமாகிய உயிரெலா மொன்று பல்பணியும்
பொருள தாகியே யொருமையாய் முடிந்தவாபோல

என்றிவ்வாறு பழைய பாடம் ஒப்பிக்கப்பட்டது.
அதன்மேல் உலகாயதப் போக்கில்,
விறலும் வன்மையு மில்லவர் தாழ்வர் மேதக்க
நெறிய ரோங்குவ ரீதுலகத்திடை நிகழ்ச்சி;
இறுதியில்லதோர் பெரியன்யான்; அறுமுகனென் [போன்
சிறியன்; ஆதலின் அவனையான் வெல்குவன் திண்ணம்
என்றான் சூரன்.

உறுதியை உரைத்தனன்; உணர்வி லாதவன்
வறிதெனை யிகழ்ந்தனன்; வருவ தோர்கிலன்
இறும்வகை நாடினன்; யாதொர் புந்தியை
அறிவிலார்க் குரைப்பவர் அவரிற் பேதையோர்.

என்று சிந்தித்துப் பெருமூச்சு விட்டான் மேதையான சிங்கமுகாசுரன்.

— தொடரும்

---

### கோடடு விற்பனவு விளம்பரம்

வலிகாமம் கிழக்கு கூட்டுறவு விவசாய அபிவிருத்தி விற்பனவுச் சங்கம் தற்பொழுது ஆவரங்கால் பலநோககுக் கூட்டுறவுச்சங்கம். —வழககாளி

இல. M.B. 3840.

எதிராக

புத்தூர் கிழக்கு

அருணாசலம் கனகசபை முத்தக்குமாரு — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M.B. 3840-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணி 1963ஆ ஆனிமீ 8-ம்உ சனிக்கிழமை முறபகல் 10 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப் படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1436-ம். 20-1-61 தொடக்கம் 31-8-61 வரைக்கும் ரூபாய் 1200-க்கு 4% வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைகளும் இறுக்கும்வரை 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 171-12 ம், இதில் ரூபாய் 1125/- கொடுபட்டிருக்கிறது.

இககொமிஷன் மேற்படி மிகுதித் தொகையை அறவிடுவதற்காக வெளியிடப்பட்டிருககிறது.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம கிழககு புததூர் கோயிற்பற்று புத்தூர் ஏதற்கு 'பறையனிருப்புததோட்டமும்" பரப்பு கிலஇலா மூன்றே முககால் பர. கில, இலா. 3¾. எல்லை கிழக்கு மளவராயர் கந்தையா கைம்பெண் வள்ளிப்பிள்ளையினுதனம், வடக்கு சரவணமுதது கந்தையாவுக்கும் மற்றவற்குமுரியவாதனம். மேற்கு சுப்பர் ஆசைப்பிள்ளைக்கும் மற்றவற்குமுரியவாதனம், தெற்கு வேலன் பெரியனுக்கும் மற்றவற்குமுரியவாதனம. இதடங்கவிலும் இல K 93/123 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது

செ. விசாகரெத்தினம்,
கொமிஷனருமவிலைமதப்பாளரும்
133 பருததித்துறை றோட்டு,
நல்லூர். யாழ்ப்பாணம்
25-4-63.
M 25 10-5-63.

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, [illegible] இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 10-5-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org